Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (28-7-66) இதழ் 168

பராபவ ஆடி 12 ரபி: ஆகி 9 வியாழக்கிழமை

## பேராதனையில் கலைப்பிரிவு மாணவருக்கு இடம்

யாழ்ப்பாணம், வியாழன்

பல்கலைக்கழக கலைப்பிரிவு மாணவர் முதல் வருடக்கல்வியை கொழும்பு குதிரைப்பந்தயத் திடலிலுள்ள பல்கலைக் கழகப்பிரிவிலும் இரண்டாவது வருடப் பயிற்சியை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொள்வர். பல்கலைக்கழக செனட் இந்த முடிவைச்செய்துள்ளது. விஞ்ஞான மாணவர்களை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கலைப்பிரிவு மாணவர்களை கொழும்பு குதிரைப் பந்தயத்திடலிலுள்ள பல்கலைகழகப் பிரிவிலும் அனுமதிக்கவேண்டுமென முன்னர் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

# கதிர்காமத்தில் பயங்கர தீ விபத்து!

## குடிசைகளும் அரசாங்கக் கட்டிடங்களும் நாசமாகின

## ரூ. 44 ஆயிரம் நஷ்டம்: யாத்திரீகர்கள் மத்தியில் பீதி

—நமது நிருபர் கே. நடராஜா—

கொழும்பு, வியாழன்

கதிர்காமத்தில் நேற்று முற்பகல் 11-30 மணிக்கும், பிற்பகல் 12-30 மணிக்கும் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் ஏற்பட்ட தீவிபத்தில் சுமார் 44 ஆயிரம் பெறுமதியான பொருட்களுக்கும், அரசாங்க உடமைகளுக்கும் சேதம் ஏற்பட்டிருக்கின்றது.

இத்தீவிபத்தின் காரணமாக யாத்திரீகர்கள் பெரிதும் பீதிகொண்டுள்ளனர். தீ குடிசைகளில் பற்றி எரிந்தபோது யாத்திரீகர்களில் அநேகர் பயத்தினால் அல்லோலகல்லோலப்பட்டனர். பலர் கீச்சிட்டுக் கத்தினர்.

இத்தீவிபத்து விபத்தினால் சம்பவித்ததென்று பொலிஸார் அறிவித்துள்ளார்.

இத்தீவிபத்து காலை 11-45 மணிக்கு ஏற்பட்டது. ஒரு குடிசையில் உணவு தயாரிப்பதற்காகத் தீமூட்டப்பட்டதிலிருந்து இத்தீ திடீரென இடுகுகளில் பற்றி எரியத் தொடங்கியதாக அறியப்படுகிறது. இதனால் சேதமடைந்த கட்டிடங்களில் கதிர்காமத் தபால்நிலையமும் ஒன்று. புத்தகங்களும் வேறு பொருட்களும் எரிந்து சாம்பராயின. ஆனால் தபால்கள் காப்பாற்றப்பட்டுவிட்டன. தபால் காப்பாற்றப்பட்டதுடன் எரிந்து போகவிருந்த 3 ஆயிரம் ரூபாவும் பாதுகாக்கப்பட்டது.

### பொலிஸ் நிலையம்

பொலிஸ் காரியாலயத்தின் அறைகளும் எரிந்து சாம்பராயின, வானொலி நிலையம் உட்பட இன்னும் இரண்டு அரசாங்கக் கட்டிடங்களும் நாசமாகின. கதிர்காமத்துக்கும் கொழும்புத் தந்திப்பகுதியினருக்குமான தந்தித்தொடர்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன. முதலில் ஏற்பட்ட இந்தத் தீவிபத்தில் சேதமடைந்த பொருட்களின் பெறுமதி சுமார் 28 ஆயிரம் ரூபாவென்று பொலிஸார் அறிவித்துள்ளனர். சௌக்கிய தானவிடுதியும் இரண்டு சிறு கடைகளும் இந்த விபத்தில் சேதமடைந்துள்ளன.

### இரண்டாவது விபத்து

முதல் விபத்து நடந்து 45 நிமிடங்களின் பின்னர் இரண்டாவது தீவிபத்து ஏற்பட்டது. பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியின் இல்லம், உதவிப் பொலிஸ் அதிகாரியின் பங்களா, நீதி

(8-ம் பக்கம் பார்க்க)

## லண்டனில் ஒரு இந்து ஆலயம் தேவை

கொழும்பு, வியாழன்

லண்டன்நகரில் இந்துஆலயம்ஒன்று நிரந்தரமாக அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்று கொழும்பு விவேகானந்த சபை பிரமுகரான திரு எஸ் சிவசுப்பிரமணியம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

இலங்கை, இந்தியா, மலேசியா ஆகிய எல்லா நாடுகளிலும்வாழும் சகல இந்துக்களும், இந்துமத ஸ்தாபனங்களும் லண்டனில் ஒரு இந்து ஆலயம் நிறுவப்படவேண்டுமென்று கருதுகிறார்கள். இதர எல்லாச் சமயத்தவர்களுக்கும்லண்டனில்ஆலயங்கள் இருக்கின்றன. இதுபோல்இந்துமதத்தவர்களுக்கும் ஒரு ஆலயம் அங்கு இருப்பது அவசியம். அங்கு வாழும் ஏராளமான இந்து மக்களின் ஆத்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் வேறுநாடுகளிலிருந்து செல்லும் இந்துக்களின் வழிபாட்டுக்காகவும் அங்கு இந்து ஆலயம் ஒன்று உருவாக்கப்படவேண்டுமென்று அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு விவேகானந்த சபையின் சமீபத்திய கூட்டமொன்றில் திரு சிவசுப்பிரமணியம் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தில் மேற்கண்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு விவேகானந்த சபை மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலுள்ள சைவபரிபாலனசபையும் இம்மாதிரியானதொரு தீர்மானத்தை சமீபத்தில் நிறைவேற்றியிருக்கின்றது.

லண்டன்நகரில் இந்துஆலயம் ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளுக்கு நிதிமூலம் அல்லது வேறு வகையில் இந்து கல்விசபை ஆதரவு நல்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமென்று அச்சபையின் காரியதரிசி திரு. கே. சி. தங்கராசா கருத்து வெளியிட்டிருக்கின்றார். இச்சபையின் ஆதரவில்தான் கொழும்பில் இந்துக்கல்லூரி உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிங்கள-தமிழ் எழுத்தாளர் ஒற்றுமை ஸ்தாபனம்

யாழ்ப்பாணம், வியா.

அரசியலில் தொடர்பற்ற முறையில் சிங்கள தமிழ் எழுத்தாளர்களைக்கொண்ட ஒருஸ்தாபனத்தை அமைக்க வேண்டுமென்றும் ஈழத்து எழுத்தாளர் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவும் எழுத்தாளர் படைப்புக்களை நூல்களாக வெளியிடவும் இந்த ஸ்தாபனம் பயன்படுத்தப்படவேண்டுமென்றும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தபேராதனை அணியைச் சேர்ந்த சிங்கள எழுத்தாளர் இருவர் யாழ்ப்பாண இலக்கிய வட்டத்தினரைச் சந்தித்துப் பேசுகையில் தெரிவித்தனர்.

மார்க் அன்ரனி பெர்னாண்டோ, டீபால் பெர்னாண்டோ ஆகிய இரு சிங்கள எழுத்தாளர்களும்இலக்கிய வட்டத்தைச் சேர்ந்த இரசிகமணி கனகசெந்திநாதன், யாழ்வாணன், அம்பி, செம்பியன் செல்வன், மு. கனகராசா, திரு எம் பி ஜேக்கப்ஆகியோரை யாழ்ப்பாணம் வை எம் சி ஏ மண்டபத்தில் சந்தித்துப் பேசினர்.

## யாழ். புதிய பஸ் நிலையத்தை அரசாங்கஅதிபர் திறந்துவைத்தார்

யாழ்ப்பாணம், வியா.

அழகுக்கோலம் பூண்டிருந்த யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தின பூர்த்தி செய்யப்பட்ட ஒரு பகுதியை யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நேற்றுமாலை திறந்து வைத்தார்.

இந்தப் புதிய பஸ் நிலையம் முன்னர் பஸ்நிலையமாக இருந்த பழைய பஸ்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

திறப்புவிழா வைபவத்தின் போது அதிர்வெடிகள் முழங்கின. புதிய பஸ்நிலையம்திறந்துவைக்கப்பட்டதைத் தொடர்ந்து முதன்முதலாக உள்ளே நுழையும் அதிர்ஷ்டம் 23 ஸ்ரீ 1357 இலக்கம் கொண்டடபிள்டெக்கர்பஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## சன்லைட் போட்டி பரிசளிப்பு

சன்லைட் போட்டியில் பரிசு பெறுவோருக்கு

யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில்

**2-8-66 மாலை 6 மணிக்கு பரிசுகள் வழங்கப்படும்**

பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள விரும்புவோர் பிரவேசச் சீட்டாக மூன்று சிவப்புப் புள்ளிகளிட்ட இரண்டு சன்லைட் உறைகள் செலுத்தவேண்டும்

பரிசளிப்பு விழாவில்

கண்ணன் கோஷ்டியினரின்

கதம்ப நிகழ்ச்சியும், படக்காட்சி ஒன்றும் இடம்பெறும்

சன்லைட் மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது- வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

மனேஜர்

கீழ்க்குறிப்பிடும் சங்கத்திற்கு ஒரு மனேஜர்தேவை. விண்ணப்பகாரர் 25—40 வயசுடையவரும், எஸ். எஸ். ஸி. பரீட்சையிற் சித்தியடைந்தவரும், கூட்டுறவுப் பயிற்சி பெற்றவரும் கீழ்க் குறிப்பிடும் விலாசத்திற்கு 10-8-1966க்கிடையில் விண்ணப்பங்கள் இரு நற்சாட்சிப் பத்திரத்துடன் அனுப்பவேண்டும். எல்லாமுட்பட மாதச் சம்பளம் 150/-. பிணைக் காசு 1500/- காணி 2000/- க. பொன்னுத்துரை, தலைவர், கல்மடுநகர் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம், ரூமநாதபுரம், கிளிநொச்சி 794

## கல்வி

வகுப்புகள்

பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான பொதுக் கலைத் தகுதிப் பரீட்சை (G.A.Q.) க்குரிய வகுப்பு ஆவணி மாதம் இணுவிலில் ஆரம்பமாகும். சேரவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும் இலங்கைப் பல்கலைக்கழக வெளிமாணவர் கழகம் வேண்டிய உதவிகளைச் செய்யும். செ. சோதிப்பெருமாள், ''தமிழகம்'', இணுவில். 796

## வாடகைக்கு

கடை

யாழ்ப்பாணம் கண்டி ரேட்டில் பரந்தன் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளும் உடைய கடை வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: சி. கணபதிப்பிள்ளை பொலிகண்டி வல்வெட்டித்துறை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 798

## விற்பனைக்கு

காணி

வீடு, தொழிற்சாலை கட்ட உகந்த காணி, 25 பரப்புக்கு மேல், துண்டு துண்டாகவும், முழுவதுமாகவும் வாங்கலாம். பள்ளிக்கூடங்களுக்கு சமீபத்தில். புகையிரத நிலையம் சமீபம். விபரங்கள்: சுவாமி 64 அ சடி வீதி, வண்ணர்பண்ணை. 797

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, நீரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

கோழிவளர்க்கும் கூடுகள்

பகுதிகளாகக் கழற்றக் கூடிய 9 கோழி வளர்க்கும் கனகூள அறைப்பெட்டிகள், [6'X4'X2'] உணவு ஏதனங்கள், முட்டைப் பெட்டிகள் உட்பட 45 ரூபா மற்றும் கோழிப்பண்ணைத் தளபாடங்களும் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம். மின்சார அடுப்பு, மின்சாரக் கேத்தல், 3 மின்சார சாஸ்பான்கள் உட்பட 150 ரூபா. ஓஸ்ரின் யுவக்கிம், ''கிறகறி வளவு'', பண்டத்தரிப்பு. 795

## கும்பாபிஷேகம்

ஹபறனை, புதன்

ஹபறனை விநாயகர் ஆலய புனர்நிர்மாணச் சபையினர் ஆகஸ்ட் மாதம் 17-ம், 18-ம் 19-ம் திகதிகளில் கும்பாபிஷேகம் நடாத்த தீர்மானித்துள்ளனர்.


## 4-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)

பி. ப. 2, 6, 9-30 மணி

ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்......எதற்கோ அழுதாள். ஆனல் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.

மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின் சிறு கதைதான்



ஜெயலலிதா - ஸ்ரீகாந்த்

மற்றும் பலர் நடித்த

ஸ்ரீதரின்

# "வெண்ணிற ஆடை"

(ஈஸ்ட்மன் கலர்)

இசை!—விஸ்வநாதன், ராமமூர்த்தி

கதை, வசனம், டைரக்ஷன்

ஸ்ரீதர்


# தமிழ் நாட்டுச் செய்திகள்

## இமயத்தில் சென்னை மாணவர்

சென்னை, ஜூலை 27

மேற்கு இமயமலையிலுள்ள 23050 அடி உயரமுள்ள ஷில்லா மலையை ஏறுவதில் 7 பேர்கொண்ட சர்வகலாசாலை மாணவர் கோஷ்டி வெற்றி கண்டிருக்கிறது. கேரள மலையேறும் சங்கத்தால் இந்தக்கோஷ்டி அனுப்பப்பட்டது. இதற்கு முன்பு இந்தச் சிகரத்தில் எவரும் ஏறியதில்லை என்று கூறப்படுகிறது.

ஃ ஃ ஃ

## 'இட்லி விலை இனி உயராது' முதல் மந்திரி

சென்னை, ஜூலை 27

'இட்லி விலையை இனி உயர்த்தக்கூடாது' என்று ஹோட்டல் அதிபர்களுக்கு முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் கூறியுள்ளார் ஹோட்டல் அதிபர்கள் மகாநாட்டிலேயே மந்திரி இதனைத் தெரிவித்தார். சமீபத்தில்ரூபாய் விலைமதிப்பை அரசாங்கம் குறைத்ததைத் தொடர்ந்து இட்லி, வடை விலைகள் உயர்த்தப்பட்டிருந்தன. பொதுமக்கள் இது சம்பந்தமாகச் செய்த புகாரைத் தொடர்ந்தே மந்திரி மேற்படி நடவடிக்கைகளை எடுத்தார்.

ஃ ஃ ஃ

## 'தமிழரசிலிருந்து வெளியேறுவேன்' —கவிஷரீப்

வேலூர், ஜூலை 27

'தமிழரசுக் கழகத்திலிருந்து நான் வெளியேறுவேன். என்னை யாரும் வெளியேற்றத் தேவையில்லை' என்று தமிழரசுக் கழகப் பிரமுகரான கவிஞர் கா. .ஷெரீப் தெரிவித்துள்ளார்.

'நான் தமிழரசுக்கழகத்திலிருந்து வெளியேற்றப்படுவேன் என்று தமிழரசுக் கழகச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையை பார்த்தேன். அவர்களுக்கு நான் அந்தச் சிரமத்தை விட்டேன்' என்றும் கவிசெரீப் தமது அறிக்கையொன்றில் கூறியுள்ளார் 1967 பொதுத் தேர்தலில் தி. மு. கழகத்துடன் தமிழரசுக்கழகம் உடன்பாடு செய்துகொள்வது குறித்து கவி கா. மு. ஷெரீப் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்தே இப்படியான மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.


ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 4-45, 7-00, 9-45

போயா தினங்களில் 4 காட்சிகள்

GELIG NITE GANG

கிலிக் நயிட் காங்

நியூ காலிங்கன் (இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

எம். ஜி. ஆர் - அஞ்சலிதேவி நடித்த

சர்வாதிகாரி

இப்பொழுது நடைபெறுகிறது

இராஜநாயகி (காங்கேசன்துறை)

"The Secret Seven"

(சினிமாஸ்கோப்)

REGAL—JAFFNA

NOW SHOWING

Kerwin Mathews in

Panic In Bangkog

(Cinemascope - Color)


## நடிகர்களை நம்பி வாழ்ந்த குடும்பம் பிச்சை எடுக்கிறது

தாம்பரம், ஜூலை 27

நடிகர்கள் உதவிசெய்வார்கள் என்று நம்பி சென்னை வந்த நெசவுத் தொழிலாளியின் குடும்பம் தெருத்தெருவாகப் பிச்சை எடுத்தது!

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த முத்தியாலு செட்டியார் குடும்பத்துக்கே இந்தப் பரிதாபகரமான நிலை ஏற்பட்டது. பல இடங்களில் பரவலாக உள்ள சினிமா நடிகர்கள் வீட்டிற்குசென்று உதவி கேட்டனர். எல்லாம் 'கோட்டை' தான்! சின்னஞ்சிறு ஐந்து குழந்தைகளை மூலை முடக்கெல்லாம்விட்டு இப்போது பிச்சை எடுக்கின்றனர்.

ஃ ஃ ஃ

## பழைய தலைவருக்கு நோட்டீஸ்!

நெல்லை, ஜூலை 27

நெல்லை நகரசபைத் தலைவராக இருந்த மாஜீத்துக்கு நகரசபை அதிகாரி நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

பிரசவ ஆஸ்பத்திரிக்குக் கொடுக்கவேண்டிய ரூபா 18 ஆயிரம் எங்கே என்று அந்த நோட்டீஸில் கேட்கப்பட்டுள்ளது. தி. மு. கழக நிர்வாகத்தில் இருந்த நெல்லை நகரசபையை அரசாங்கம் கலைத்தது தெரிந்ததே. கலைக்கப்பட்ட நகரசபைத் தலைவராக இருந்த மஜீத் கடந்த ஆண்டு ஒரு பொருட்காட்சி நடாத்தினர். பொருட்காட்சி லாபத்தொகை முழுவதும் நெல்லை பிரசவ ஆஸ்பத்திரிக்குக் கொடுக்கப்படுமென்று திரு. மஜீத் அறிவித்திருந்தார். இதுசம்பந்தமாகவே இந்த நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

## 'காங்கிரஸ் தோற்கும்'

சென்னை, ஜூலை 27

'1967 தேர்தலில் பல மாநிலங்களில் காங்கிரஸ் தோற்கும். காங்கிரஸ் தோற்கடிக்கப்படும் மாநிலங்களில் தமிழ் நாடும் ஒன்று.'

சென்னையில் சுதந்திராக் கட்சியின் கமிட்டிக் கூட்டம் முடிந்த பிறகு, சுதந்திராக் கட்சி பொதுச் செயலாளர் திரு. எம். ஆர். மசானி பத்திரிகை நிருபர்களிடம் மேற்கண்டவாறு சொன்னர்.

'வருகிற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்க எதிர்க்கட்சிகளுடன் சுதந்திராக் கட்சி தேர்தல் உடன்பாடு செய்துகொள்ளும். தமிழ் நாட்டில் தி. மு கழகத்துடன் உடன்பாடு செய்துகொள்வோம்' என்று திரு மசானி மேலும் கூறினர். ——

## "பற்றற்றவருக்கே உலக பேரின்பம்"

கோண்டாவில், புதன்.

''உலகப்பற்றுக்களைக் களைந்தவனுக்கே இறைவனது பேரின்பம் கிடைக்கிறது. இறைவனுக்குத் தொண்டு செய்யும்பொழுது பேரருளை நினைக்க வேண்டுமே தவிர சிற்றின்பங்களுக்கு வழி வகுக்கும் அற்ப ஆசைகளிலே மனதைச் செலுத்தக் கூடாது.''

கோண்டாவில் மேற்கு வேதபாராயணசனசமூகநிலையத்தில் திரு. சி. க. கனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற சுந்தரமூர்த்தி நாயனர் விழாவில் கலந்துகொண்ட திரு. ரி. புஷ்பலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்மேலும்பேசுகையில், இறைவன்மேல் பேரன்பு கொண்டவர்க்கு இறைவன் வேண்டிய தெல்லாவற்றையும் உரியநேரத்திலேகொடுத்தருள்வான். சுந்தரமூர்த்தி நாயனருக்காக இறைவன் தோழனகச்சென்றமையும் எடுத்துக் காட்டுகின்றன.

திருவாளர்கள்: வாமதேவன், நா. க. . கனகலிங்கம் ஜெகதீஸ்வரன், முத்துலிங்கம், இராமச்சந்திரன், மகாலிங்கம் ஆகியோரும்பேசினர்.


## விளம்பரம்

### அறிவித்தல்

வேலையற்ற இலங்கைக் கலைப்பட்டதாரிகள் சங்கம்

மேற்படி சங்கத்தின் முக்கிய பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை (30-7-66) காலை 9-30 மணிக்கு ஆனைப்பந்தியடி உயர்கலைக் கல்லூரியில் இடம்பெறும். பட்டதாரிகள் அனைவரும் தவருது சமூகம் தரவும். 695


## கல்லூரிமாற்றம்

உடுப்பிட்டி, செவ்வாய்

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி அடுத்த வருடம் முதல் மகளிர் கல்லூரியாக மாற்றப்படவிருக்கிறது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆண்கள் கல்லூரியாகும்.

## ஆண்டு விழா

சாவகச்சேரி, புதன்

தனங்கிழப்பு, மணற்காடு இந்து வாலிபர் சங்கத்தினரின் 2-வது ஆண்டு நிறைவு விழா ஆகஸ்ட் மாதம் 14-ந் திகதி மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை மண்டபத்தில் திரு. நா. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. அப்போது சிறப்பு நிகழ்ச்சிகளாகப் பல சமயப்பெரியோர்களின் விரிவுரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## குருபூசை விழா

யாழ்ப்பாணம், வியா.

சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை பொன்னலை வரதராசப்பெருமாள் வித்தியாசாலை மண்டபத்தில் தலைமையாசிரியர் திரு. க. சரவணமுத்து தலைமையிற் கொண்டாடப்பட்டது மாணவர்களின் விசேட கூட்டுப் பிரார்த்தனையின் பின் திரு. கா. துரைராசசிங்கம் ''சுந்தரரின் மணவிழா'' என்னும் பொருள் பற்றியும் செல்வி செல்வரஞ்சிதம் ''ஆலாலரின் அருள் நெறி'' எனும் பொருள் பற்றியும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

ஃ ஃ ஃ

கொழும்பு, புதன்

சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசைவிழா கொழும்பு இந்துவாலிர் சங்க ஆதரவில் செட்டியார் தெரு ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் திங்கள்மாலை நடைபெற்றது விழாவிற்கு சங்க உபதலைவர் திரு. க. க. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். தேவாரம், தலைமையுரை அடுத்து திரு. க. சி. சண்முகம் ''சுந்தரமூர்த்தி நாயனர்'' பற்றிச் சொற்பொழிவாற்றினர். திரு. வி. அண்ணமலை பக்திப் பாடல்கள் பாடினர். விழாவில் கூட்டுப்பிரார்த்தனையில் கலந்துகொண்ட சிறுவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன,

ஃ ஃ ஃ

சங்கானை, புதன்

நவாலி களுவோடை அம்மன் கோவிலில் சுந்தரர்குருபூசை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நண்பகல் அன்னதானமும் இடம்பெற்றது.

ஃ ஃ ஃ

கோண்டாவில், புதன்

இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையில் சுந்தரமூர்த்திநாயனர் குருபூசை, கல்லூரி அதிபர் திரு. வ. நடராசா தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் அன்னதானம் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் வியட்னுமின் படையெடுப்பு யோசனை:

# அமெரிக்கா நிராகரித்தது!

## "யுத்தம் விரிவடைவது அமெரிக்காவின் கொள்கையல்ல"

வாஷிங்டன், ஜூலை 26

**வடக்கு வியட்னுமில் படையெடுக்க வேண்டுமென்ற தென் வியட்னும் பிரதமர் ஏர் வைஸ் மார்ஷல் கீயின் யோசனையை அமெரிக்கா நிராகரித்து விட்டது.**

யுத்தம் விரிவடைவதை அமெரிக்கா ஒருபொழுதும் விரும்பியதில்லை என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

"வடக்கு வியட்னுமில் குண்டு வீச்சுக்கள் நடத்தினுல் மட்டும் போதாது. அதன் மீது இராணுவப் படையெடுப்பு வேண்டும்" என்று தென்வியட்னும் பிரதமர் அமெரிக்காவுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

தென் வியட்னும் பிரதமரின் யோசனை குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் நேற்றுக் கருத்து வெளியிடுகையில் வியட்னுமில் போர் விரிவடைவதை அமெரிக்கா விரும்பவில்லை என்றும் அதனை முடிவுக்குக் கொண்டு வருவதே அமெரிக்காவின் நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.

### எதிர்ப்பு வலுக்கிறது

இதற்கிடையே வியட்னும் சம்பந்தமான அமெரிக்காவின் கொள்கைக்கு பிரிட்டனில் எதிர்ப்பு அதிகரித்து வருகிறதென்று லண்டனிலிருந்து வெளியான செய்திகள் கூறுகின்றன.

### தாக்குதல் நீடிப்பு

நேற்று அமெரிக்க விமானங்கள் வடக்கு வியட்னுமில் தொடர்ந்து குண்டு மாரி பொழிந்தன.

## கொரில்லாக்களின் 90 நிமிடத் தாக்குதல்

நேற்று தென் வியட்னுமில் அமெரிக்க இராணுவ தலைமைக்காரியாலயமொன்றின் மீது கொரில்லாக்கள் தொண்ணூறு நிமிட நேரத் தாக்குதல்கள் நடத்தினர். இயந்திரத் துப்பாக்கிகளினுல் நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் சிறிது சேதமேற்பட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர் நேற்று தெரிவித்தார்.

## "கம்யூனிஸ்டுகள் வெற்றிபெற்ருல் தனது பசியைத் தீர்த்துவிடும்"

### ஜோன்ஸன் எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூலை 27

வட வியட்னுமின் இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஒரு புதிய "குடியேற்ற ஆட்சியை" பிரதிபலிப்பதாகவும், இது பற்றி எச்சரிக்கையகஇருக்குமாறும் ஜனுதிபதி ஜோன்ஸன் தெரிவித்தார்.

தென்வியட்னுமில் இது வெற்றிபெற்ருல் தென்கிழக்கு ஆசியா முழுவதற்கும் பங்கமாக அமையுமென்று கூறியுள்ளார்.

தென்வியட்னுமைக் கைப்பற்ற ஹனேய் ஆட்சி மேற்கொண்டுவரும் திட்டங்களை முறியடிக்க அமெரிக்கா என்றும் தயாராக இருப்பதை வலியுறுத்திய ஜனுதிபதி கௌரவமான சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள அமெரிக்கா என்றும் சித்தமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தியானுப் பொலிஸில் உரைநிகழ்த்திய ஜனுதிபதி "கம்யூனிஸ்டுகள் தென்வியட்னுமில் வெற்றிபெற்ருல் அதனைத் தொடர்ந்து ஆசியாவில் பேராசை ஏற்படும். ஆக்கிரமிப்பும் பசியைப் போன்றது என்பதை கம்யூனிஸ்டுகள் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளனர். அது எந்தவொரு சட்டத்திற்கும் கட்டுப்படாது. தன்பசியைத் தீர்ப்பதே அதன் லட்சியமாக இருக்கும்" என்ருர்.

"வடவியட்னும் தனது சட்டதிட்டங்களை தென்வியட்னுமில் புகுத்த எத்தனிப்பது, ஒரு புதுவித குடியேற்ற ஆட்சிக்கு ஒப்பாக இருக்கிறது. ஆசியாவின் சுதந்திர நாடுகள் இதனை உடனடியாகநிறுத்த வேண்டுமென்கின்றன" என்ருர்.

தென்வியட்னுமில் கம்யூனிஸ வெற்றி, உலகின் ஏனையபகுதிகளிலும் ஆக்கிரமிப்பை மேற்கொள்ள உந்துதலாக அமையுமென எச்சரித்த ஜனுதிபதி, கொரில்லா யுத்தம் தென்வியட்னுமில் வெற்றிபெற்ருல் ஆபிரிக்காவிலும். லத்தீன் அமெரிக்காவிலும் வெற்றிபெறலாமென வடவியட்னும் நம்புகிறது என்ருர்.

கியூபாவிலும், ஆபிரிக்காவிலும், இந்தோனேஷியாவிலும் அண்மைக்காலத்தில் கம்யூனிஸத்திற்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பைக் குறிப்பிட்ட திரு. ஜோன்ஸன், தென்வியட்னுமில் வெற்றி ஏற்பட்டால் புத்துயிர் ஊட்டும் என்ருர். "இது ஒருபொழுதும் நடைபெருது. நாம் வியட்னுமிலிருந்து ஓடிவிடப்போவதில்லை. எமது வாக்குறுதியைக் கைவிடப் போவதுமில்லை. கம்யூனிஸ்டுகள் யுத்தத்தைக் கைவிடும்வரை அல்லதுசமாதான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளும்வரை அங்கிருப்போம்" என்ருர்.

## இந்தியாவுக்கு ஜப்பான் கடனுதவி

டோக்கியோ, ஜூலை 27

இந்தியா தனது பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க உதவும் வகையாக ஜப்பானிய அரசாங்கம் 4 கோடி அமெரிக்க டாலர் கடனளிக்கத் தீர்மானித்துள்ளது. (பி. டி. ஸி)

## கொரியாவில் கடும் மழை

சியோல், ஜூலை 27

கடந்த 10 நாட்களாக இங்கு பெய்த கடும் மழையினுல் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவு ஆகியவற்றில் 59 தென் கொரியர் உயிரிழந்தனர். 16 பேரைக் காணவில்லை, 60,000 பேர் வீடிழந்தனர். (பி. டி. ஸி)

## இருவருக்கு மரண தண்டனை

பிராஸவில், ஜூலை 27

கொங்கோ - பிராஸவில் மக்கள் நீதிமன்றம் இருவருக்கு மரண தண்டனை அளித்தது. ஒகஸ்ட், 1694-ல் நாட்டுக்குள் ஆயுதங்கள் கள்ளக்கடத்தல் செய்ததும், இராணுவப் புரட்சிக்குச் சதி செய்ததுமே அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களாகும். (பி. டி. ஸி)

உத்தரபிரதேசத்தில்

## நிலைமை வழமையானது

லக்னே, ஜூலை 27

அண்மையில் ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்கள் காரணமாகக் கைதுசெய்யப்பட்ட அரசாங்க ஊழியர்களை விடுதலை செய்வதென்று ராஜிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

வேலைநிறுத்தத்தை அரசாங்க ஊழியர்கள் கைவிட்டதைத் தொடர்ந்து இங்கு நிலைமை திருந்தியிருக்கிறது. லக்னேவில் நிலைமைவழமையானது.

## தி. மு. க. வெளிநடப்பு

புதுடில்லி, ஜூலை 27

நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் பொருளாதார நிலைமை பற்றி நிதிமந்திரி தமது பிரசங்கத்தை நிகழ்த்துவதற்கு சபாநாயகர் அனுமதி அளித்ததை ஆட்சேபித்து திராவிடமுன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் லோகசபையில் வெளிநடப்புசெய்தனர்.

## வானவெளி வல்லரசுகள்

ஜெனிவா, ஜூலை 27

வானவெளிக்கு அனுப்பப்படும் கருவிகளினுல் பிற நாடுகளுக்கு ஏற்படக்கூடிய சேதங்களுக்கு வானவெளி வல்வரசுகளே சர்வதேச ரீதியில் பொறுப்பேற்க வேண்டுமென்ற கருத்துக்கு சோவியத்ரஷ்யாவும், ஐக்கிய அமெரிக்காவும் [illegible] தெரிவித்துள்ளன. (பிடிஸி)

## விண்வெளி ஆராய்ச்சி பற்றிய நகல் ஒப்பந்தம்

ஜெனிவா, ஜூலை 27

விண்வெளியும் இயற்கைக் கோள்களும் குறிப்பிட்ட ஒரு நாட்டின் சொந்தஉடைமையாக்கக் கூடியவையல்ல என்பதில் அமெரிக்காவும் சோவியத்யூனியனும் பிற நாடுகளுடன் கொள்கையளவில் உடன்பாட்டுக்கு வந்துள்ளன.

விண்வெளியை அமைதிப் பணிக்குப் பயன்படுத்துவது பற்றிய ஐ.நா. சபையின்சட்டத்துணைக் குழு அமெரிக்க நகல் ஒப்பந்தத்தையும், ரஷ்ய நகல் ஒப்பந்தத்தையும் பற்றி விவாதித்துவருகிறது. ஒவ்வொரு நகலிலும் மேற்கண்ட கருத்தைவெளியிடும் ஒரேமாதிரியான சொற்களால் ஆக்கப்பெற்ற விதிகள் இருக்கின்றன

அமெரிக்க தூதர் ஆர்தர் ஜே கோல்ட்பர்க் இரண்டு நகல்களையும் இணைத்து முறைப்படுத்தியதை துணைக் குழு ஏற்றுக்கொண்டது. சந்திரனும், பிற இயற்கைக் கோள்களும் உட்பட, விண்வெளியானது, ஆதிபத்திய உரிமை காரணமாகவோ அனுபவ உரிமை காரணமாகவோ அல்லது வேறுஎந்தக் காரணமாகவோ, குறிப்பிட்ட ஒரு நாட்டின்சொந்த உடைமையாக்கக் கூடியதல்ல".

ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளநாடுகள், சந்திரன், பிற இயற்கைக் கோளங்கள்உட்படவிண்வெளியை ஐ. நா. சாஸனம் உள்ளிட்டு சர்வதேசச் சட்டப்படி பயன்படுத்தலாம் விண்வெளியில் ஆராய்ச்சிப்பணிகள் நடத்தலாம்; சர்வதேச அமைதி பந்தோபஸ்துஆகியவற்றை நிலைநிறுத்துவதிலும், சர்வதேச ஒத்துழைப்பு, நல்லுணர்வு ஆகியவற்றை வளர்ப்பதிலும் அக்கறையையொட்டி இவை இருத்தல்வேண்டும்,

துணைக்குழுவின் தலைவர் மான்ஃபிரெட் லாக்ஸ்; போலந்தைச் சேர்ந்தவர்.

## உலக விவசாய விஞ்ஞானிகள் மகாநாடு

### லண்டனில் நடைபெறுகிறது

லண்டன். ஜூலை 27

தென்இங்கிலாந்தைச்சேர்ந்த ரீடிங் சர்வகலாசாலையில் உலக விவசாய விஞ்ஞானிகள் மகாநாடுஒன்றுநடைபெற்றுவருகிறது. 87 நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான விஞ்ஞானிகள் இம்மகாநாட்டில் பங்கு பற்றிவருகிருர்கள். 26ந் திகதி ஆரம்பமான இம்மகாநாடு ஜூலை 30ந்திகதி வரை நடைபெறும்.

உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில் காலநிலை மற்றும். இயற்கைச்சூழ்நிலைகளை மதிப்பிடும் விஷயம் பற்றியே இம் மாநாட்டில் ஆராயப்படும் ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தின் தட்பவெப்ப நிலையை அளவிட்டறிந்து, அதனைக் கொண்டு எதிர்கால விவசாயத் திட்டங்களுக்கு வழி வகுப்பது பற்றியும் இங்கு பரிசீலனை செய்யப்படும்.

பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்திமந்திரி திரு. ஏ. ஈ. ஒறம் இம்மகாநாட்டில் பேசுகையில், உலக உணவு உற்பத்தியைப் பெருக்குவதாயின் விவசாயத்திற்கு காணிகளைப் பிரயோகிக்கும் புராதன முறைகளை உடனடியாகக்கைவிடவேண்டுமென கேட்டுக்கொண்டார்.

"நீர்வளம், காலநிலை ஆகியவைபற்றி நன்கு அறிந்திருந்தால், விஞ்ஞான முறையில் நிலத்தைப்பயன்படுத்தி அறுவடையை அதிகரிக்கச் செய்யலாம்" என்ருர் அவர்.

ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனம், யுனெஸ்கோ ஆகியவற்றின் ஆதரவிலேயே இம்மாநாடு நடைபெறுகிறது.

## இந்தோனேஷிய அரசாங்க தலைமைக் குழு

ஜாகர்த்தா, ஜூலை 28

இந்தோனேஷியாவின் புதிய மந்திரிசபையில் ஐவர் கொண்ட தலைமைக் குழுவின் தலைவராக இராணுவத்தலைவர் ஜெனரல் சுஹார்ட்டோ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தலைமைக் குழுவின்கீழ் 24 மந்திரிகள் உள்ளனர்.

ஜெனரல் சுஹார்ட்டோ, பாதுகாப்பு, பந்தோபஸ்து. டாக்டர் அசம்மாலிக்- அரசியல் வெளிவிவகாரங்கள். திரு. இதாம்சலிட்-சமூக நலன். திரு. சுல்தான் புவோனே- நிதி, பொருளாதாரம். சனுஸிஹர்ஜதிகை- தொழில், அபிவிருத்தி.

பழைய தலைமைக்குழுவிலிருந்த உதவிப் பிரதமர் ஜோஹானஸ் லீமினுவும், அரசியல் ஸ்தாபனங்கள் மந்திரி ருஸ்லன் அப்துல்கனியும் புதிய குழுவில் இடம்பெறவில்லை. இவர்கள் ஜனுதிபதி சுகர்னேவின் அடிவருடிகள் என்று மாணவ ஸ்தாபனங்கள் கண்டித்திருந்தன

பிரதமர் அந்தஸ்தை சுகர்ணே இழப்பதாகவும் ஆனுல் அவர் பதவியில் நீடிப்பதாகவும் நிருபர்களிடம் சுஹார்ட்டோ தெரிவித்தார்.

## கணவன் அனுமதிக்காததால் மனைவி தற்கொலை

திருச்சி, ஜூலை 27

பரீட்சையில் தோல்வியடைந்த மாணவி தன்னை மீண்டும் படித்துப் பரீட்சை எழுத தனது கணவர் அனுமதிக்காததால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று இங்கு நடந்துள்ளது.

சாத்தான் குளம் சரகம் அடையல் என்ற ஊரைச் சேர்ந்தவர் ஜெயவீரன் இவருடைய மனைவி மங்கையர்க்கரசி. மங்கயர்க்கரசி பி. எஸ். ஸி. படித்து வந்தார். இறுதிப்பரீட்சையில் தோல்வியடைந்தார். மீண்டும் படிக்கவிரும்பியபோது கணவர் மறுத்துவிடவே தாலியைக் கழற்றி கணவர் முகத்தில் எறிந்துவிட்டு நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கிராமவாசிகளுக்கு வேலை தேடிக்கொடுப்பதற்கான வழி, அவர்கள் இதுவரையில் செய்துவந்திருக்கும் கைத்தொழில்களுக்குப் புத்துயிர் அளிப்பதேயன்றித் தொழில்களை இயந்திரமயமாக்கிவருவதல்ல.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி மீ 12 உ (28-7-66)

# மீண்டும் துண்டு விழும் வரவு—செலவுத்திட்டம்

மீண்டும் துண்டு விழும் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. சென்ற வருடத்தை விட இம்முறை துண்டு விழும் தொகை அதிகரித்துள்ளது. துண்டு விழும் தொண்ணூறு கோடி எண்பது லட்சம் ரூபாயையும் நிதிமந்திரி எப்படிச் சரிக்கட்டப் போகிறாரென்பது நாளை அவர் நிகழ்த்தும் வரவு செலவுத் திட்டப் பிரசங்கத்தில் தெளிவாகிவிடும்.

வெளிநாட்டு உதவியாக சுமார் 60 கோடி ரூபாய் கிடைக்குமென்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. துண்டு விழும் தொகையில் வெளிநாட்டு உதவியைக் கொண்டு 60 கோடி ரூபாயைச் சரிக்கட்டினாலும் மேலும் முப்பது கோடி ரூபாயை நிதி அமைச்சர் எப்படிச் சரிக்கட்டுவார். புதிய வரிகள் மூலம் தான் இதைச் செய்யவேண்டும். இப்பொழுதுள்ள நிலையில் மேலும் அதிக வரியை நாடு தாங்க முடியுமா? அதிகவரி, இங்கு அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவியளிக்க முடியுமா? அபிவிருத்தித் திட்டங்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு மூலதானங்களைக் கொண்டுவர, அதிக வரிவிதிப்பு இடையூறு செய்யாதா?

நிதி அமைச்சரின் யோசனைகள் எதுவாக இருப்பினும் சீர்குலைந்துள்ள நாட்டின் பொருளாதார நிலையைச் சீராக்குவதற்கு நாட்டு மக்களும் தமது பங்கை செலுத்தத் தான் வேண்டும் எனினும் சாதாரண, எளிய மக்களைப் பாதிக்கக் கூடிய வரிகளை நிதி அமைச்சர் கொண்டு வரமாட்டாரென எதிர்பார்க்கலாம்.

வரவு-செலவுத்திட்டத்தில் பெருந்தொகைப் பணம் துண்டு விழுவதற்கு உணவு மான்யமே முக்கிய காரணம். கூடிய விலைக்கு வெளிநாடுகளில் அரிசியை வாங்கி குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்கப்படுகிறது. இதனால் ஏற்படும் செலவை அரசாங்கம் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இதன் காரணமாகவே வெளிநாடுகள் இலங்கைக்கு நிதி உதவி அளிக்கவும் அச்சம் தெரிவித்தன. இலங்கையின் நிதி நிலைமை ஸ்திரமற்றதாக இருப்பதும் மற்றொரு காரணமாகும்.

கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக சேவைகளுக்கும் இம் முறை சிறிது தொகை அதிகரிக்கப்பட்டிருப்பினும் சமூகசேவைகளுக்கு அதிக பணம் செலவிடுவது தான் பற்றாக் குறைக்குக் காரணம் என்று சொல்வது தவறானதாகும். உணவு மான்யத்தில் குறைவேற்பட்டால் இவ்வளவு பெரும் தொகை துண்டு விழக் கூடியதாக வரவு-செலவுத் திட்டம் தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது.

இம்முறை கைத்தொழில், மீன்பிடி, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகிய அமைச்சுக்களுக்கு அதிக தொகை ஒதுக்கப்பட்டிருப்பதைக் காண மகிழ்ச்சி அடைகிறோம். வெளிநாட்டு உதவிகளை எதிர்பார்த்துக் கொண்டிராது நம் சுயபலத்தில் தங்கியிருக்க வேண்டுமாயின் கைத்தொழில் மீன்பிடி அபிவிருத்தியும் உணவு உற்பத்தியும் பெருகவேண்டும்.

## பல்கலைக்கழகம் கிடைக்காதா?

தமிழ் பேசும் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்ற கோரிக்கையும் இந்துக் கலாச்சாரப் பல்கலைக்கழகம் வேண்டுமென்ற கோரிக்கையும் என்னவாயிற்று?

அடுத்த நிதிஆண்டுக்கான தேசிய அரசாங்கத்தின் இரண்டாவது நகல் வரவு—செலவுத்திட்டம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒக்டோபர் மாதம் முதல் திகதியிலிருந்து ஆரம்பமாகும் நிதிவருடத்தில் அரசாங்கம் எதிர்பார்க்கும் உத்தேச வருமானம் செலவிட உத்தேசித்திருக்கும் தொகை பற்றி இந்த வரவு-செலவுத்திட்டத்தில் நிதி மந்திரி தெரிவித்திருக்கிறார். அடுத்த ஆண்டில் எந்தெந்த அமைச்சுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதென்பதையும் புதிதாக ஆரம்பிக்க உத்தேசித்துள்ள வேலைகள் அவற்றுக்கு ஏற்படக்கூடிய கூடிய செலவு ஆகியவை பற்றியும்குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணநகரில் புதிய பொலிஸ் நிலையம அமைக்கவும், மாவட்ட நீதிபதியின் பங்களா கட்டவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் தமிழ் மக்களுக்கெனப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. தமிழ் மாணவரின் கல்விக்கும் இந்துக் கலாச்சாரத்தைப் பேணுவதற்கும் பல்கலைக்கழகம் வேண்டுமென்ற நீண்ட நாளையக் கோரிக்கை இந்த ஆண்டிலும் நிறைவேறுமா என்பது சந்தேகம். வரவு—செலவுத்திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்படவில்லை. முன்னைய அரசாங்கம் பதவியிலிருந்த போது இராமநாதன் பல்கலைக்கழகத்துக்கென பத்து ரூபாய் அடையாள மான்யம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன்பின் ஒவ்வொரு வரவு—செலவுத் திட்டத்திலும் அது அப்படியே இருந்துவருகிறது.

அடையாள மான்யம் பத்து ரூபாய் தவிர பல்கலைக்கழகம் அமைப்பதற்கு இவ்வருடமும் நிதி ஒதுக்கப்படாதது நமது தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு ஒரு பாடமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

பல்கலைக்கழக நீடாம் விசாரணைக் கமிஷனும் குணவர்த்தன கமிஷனும் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழகப் பிரிவு அமைக்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்திருந்தன. கமிஷன் சிபார்சு செய்தும் பல்கலைக்கழகம் கிடைக்காமலிருப்பதற்கு நமது பிரதிநிதிகளும் ஓரளவுபொறுப்பு கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்பதா? யாழ்ப்பாணத்தில் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு இணங்குவதா? தமிழ்ப் பல்கலைக்கழகமா? இந்துப் பல்கலைக்கழகமா? இதில் எதற்குச் சம்மதிப்பது? இந்தச்சங்கட நிலைமை காரணமாகவே அரசாங்கம் நிதி ஒதுக்காமல்விட்டிருக்கலாம்,

யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்ற முப்பது வருடக் கோரிக்கையை அரசாங்கத்தை ஏற்கச் [illegible] தமிழ்ப் [illegible] முக்கிய கடமையாகும்.

# 1966 - 67 உத்தேச வருமான, செலவு விபரங்கள்

கொழும்பு, புதன்

1966 அக்டோபர் முதல் திகதியிலிருந்து ஆரம்பமாகும் நிதிவருடத்தில் அரசாங்கத்தின் உத்தேச செலவு ரூ. 2,86 கோடி 60 லட்சமென நிதிமந்திரி சமர்ப்பித்துள்ள இரண்டாவது நகல் வரவு-செலவுத்திட்டத்தில் எதிர் பார்க்கப்பட்டுள்ளது. இதன் விபரம் வருவாறு:

உணவு, விவசாயம்
ரூ. 48,24,14,846
கைத்தொழில், மீன்பிடி
ரூ. 17,64,10,451
காணி நீர்ப்பாசன மின்சார
ரூ. 33,01,78,244
நிதி
ரூ. 44,68,06,678
பொது வேலை, தபால்
ரூ. 19,84,45,873
கல்வி, கலாச்சாரம்
ரூ 40,21,75,957
சுகாதாரம்
ரூ. 17,89,07,870
தகவல் தொடர்பு
ரூ 18 83,33,288
உள்நாட்டு விவகாரம்
ரூ. 7,2151.628
வெளிநாட்டு விவகாரம்
ரூ 14 04,36,938
அரசாங்கம்
ரூ. 3,32,43,314
தேசிய சேவை
ரூ 4,79,87,392
உள்ளூராட்சி
ரூ 7,68,30,003
தொழில், வேலை, வீடமைப்பு
ரூ. 1,32,42,504
சமூக சேவை
ரூ. 3,35,10,764
வர்த்தகம்
ரூ. 5,9,69,640
நீதி
ரூ. 2,49,31,319
கவர்னர் ஜெனரல், பிரதமர் உட்பட வேறு செலவினங்கள்.
ரூ. 26,84,668
மொத்தம்
ரூ. 2,86,69,08,596

உத்தேச வருமானம் வருமாறு:-

சுங்க இலாகா
ரூ. 79,69,50,000
கலால்
ரூ. 37,62,83,000
வருமானவரி
ரூ. 30,90,20,500
ரயில்வே
ரூ. 10,15.00,000
மின்சாரம்
ரூ. 6,41,69,000
தபால், தந்தி
ரூ. 5,71.20,500
லைசென்ஸ்
ரூ. 4,38,09,115
சகல வழிகளால் வரவு
ரூ. 5,14.50,080
வட்டி
ரூ 5,12,91,457
கோர்ட் செலவு
ரூ. 3,19,39,266
துறைமுகம்
ரூ. 2,95,47,411
மீட்டல்
ரூ. 2,28,71,678
ஒலிபரப்பு இலாகா
ரூ. 84.33,500
காணி
ரூ. 60,92,750
சுகாதாரம்
ரூ. 52,83.700
காணி விற்பனை
ரூ 32,57,500
மொத்தம்
ரூ 1,95,80,19,452

## அரசாங்க வர்த்தக நிலையங்கள்?

கொழும்பு, வியாழன்

அரசாங்க வர்த்தக நிலையங்கள் நிறுவுவதற்கான சட்டம் இயற்றுவதுபற்றி வர்த்தக அமைச்சு ஆலோசித்திருப்பதாகத் தெரிகிறது. ''பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதி, விநியோகம்'' சம்பந்தமாகவே இவை இயங்கும்.

தனியார் துறையின் சாதனை திருப்திகரமாக இல்லாதபடியினாலேயே இறக்குமதி, விநியோகம் ஆகியவற்றில் பொதுத்துறையை ஓர் முக்கிய கருவியாகப் பயன்படுத்த அமைச்சு ஆலோசித்துள்ளது என உத்தியோக பூர்வமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னைய மந்திரிகளான திரு. ரி. பி. இலங்கரத்தின, டாக்டர் என். எம். பெரேரா ஆகியோர் தயாரித்த சட்டங்களின் இணைப்பையே அமைச்சு விரும்புவதாக அவை மேலும் தெரிவித்துள்ளன. இம்மந்திரிகள் இருவரும் தயாரித்திருந்த மசோதாக்களின்படி அரசாங்கமும், பொதுமக்களும் பொருட்களின் இறக்குமதி, விநியோகம் இவற்றில் அதிக பங்கெடுக்க சட்டமியற்றப்பட்டிருந்தது.

## பட்டதாரிகள் தலையிடிபற்றி மந்திரி

பிங்கிரியா, புதன்

சென்ற ஆண்டில் 3000 பட்டதாரிகள் சர்வகலாசாலையிருந்தும் சித்தியெய்தினர். அரசாங்கம் 600 பேர்களுக்கு மாத்திரம் வேலை வாய்ப்பைக் கொடுத்தது, மிகுதி 2400 பேரும் அரசாங்கத்திற்கு ஒரு தலையிடியாகவே இருக்கின்றனர்' என்று கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை சந்தலங்காவா பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

## ஐவர் கைது
### காரைநகர் திருட்டின் எதிரொலி

யாழ்ப்பாணம், வியா.

காரைநகரிலுள்ள வீடொன்றில் மூன்று மாதத்துக்கு முன்னர் நடைபெற்ற திருட்டொன்றின் எதிரொலியாக ஊர்காவற்றுறை பொலிஸாரால் ஐவர் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் வாசிகளான வி. கதிரமலை, என். வேலாயுதம், என். கதிரமலை, எஸ். மார்க்கண்டு, எஸ். சின்னத்துரை ஆகியோரே கைது செய்யப்பட்ட நபர்களாவர். (ந.நி.)

## நாடும் நடப்பும்

இலங்கைப் பல்கலைக்கழக கலைப்பிரிவுக்கு அடுத்தகல்வி வருடத்தில் எத்தனை மாணவர் தெரிவு செய்யப்பட இருக்கிறார்கள் தெரியுமா? 1500 பேர்தான். அப்படியா தமிழ் மாணவர் எத்தனை பேர் தெரிவு செய்யப்படுவார்களென்று நினைக்கிறீர்கள்? சுமார் 150 பேர்தான்!

இலங்கையிலுள்ள மாணவர்களில் 1500 பேர்தான் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து உயர் கல்வி கற்கத்தகுதியுடையவர்களென நினைக்கிறீர்கள். பல்கலைக்கழகத்திலுள்ள இடநெருக்கடிப் பிரச்னைக்கு ஒரேவழி, கல்வி கற்பதற்கான மாணவர் தொகையைக் குறைப்பது தான் என்று 'கண்டுபிடிப்பு' செய்ததன் பயன்தான் இது. அதாவது காலுக்கு அளவாகச் செருப்பு வேண்டுமென்பதல்ல; செருப்புக்கு அளவாக கால் இருக்க வேண்டும்!

பல்கலைக்கழக இடநெருக்கடியைத் தீர்க்க பலரும்பல விதயோசனைகளைத் தெரிவித்தனர். எந்தயோசனையும் செயலபடுவதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகமோ பல்கலைக்கழக பிரிவோ அமைக்கலாமென்று ஒருவர் சொன்னால் போதும் ''எங்களுக்கும் வேண்டும், எங்கள் பகுதியில் மாணவர்கள் இல்லையா? என்ற எல்ல மூலைகளிலிருந்தும் குரல் ஒலிக்கத் தொடங்கிவிடும் ''உனக்கும் பெப்பே, உன் அப்பனுக்கும்பெப்பே'' என்று ஒருவருக்கும் பல்கலைக்கழகம் கிடையாது என்று அரசாங்கம் கைவிரித்து விட்டது. தனக்கு மூக்குப் போனாலும்பரவாயில்லை எதிரிக்குச்சகுனப்பிழையாயிருந்தால் போதும் என்ற ''நல்ல'' மனப்பான்மை உள்ளவர்களுக்கு இதனால் திருப்திதான்!

ஃ ஃ ஃ

90 கோடி 80 லட்சம் ரூபாய் துண்டுவிழும் வரவு-செலவுத்திட்டத்தைத் பாதித்துள்ள நமது நிதி மந்திரி நாளை இந்தொகையைச்சரிக்கட்டுவதற்கான யோசனைகளைத் தெரிவிக்க விருக்கிறார். வெளிநாட்டு உதவித் தொகையை விட மற்றும் சுமார் முப்பதுகோடி ரூபா வரிவிதிப்பதன் மூலம் சமாளிக்கவேண்டி யிருக்கும்.

ஆடம்பரப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்படுமா? வெளிநாட்டு இறக்குமதிப் பொருள்களுக்கு அதிக தீர்வை விதிக்கப்படுமப?
சுங்கத் தீர்வை மூலம் எதிர்பார்க்கும் வருமானத்தை விடமிகுதித் தொகையை மறைமுகமாக வரிகல் மூலம் பெறுவதற்கு நிதி அமைச்சர் தமது யோசனை தெரிவிக்கக் கூடுமெனத் தெரிகிறது. நேர்முகவரிகளாலும் மறை முகவரிகளாலும் சாதாரண எளியபொதுமக்கள் தான் தாக்கப்படுவார்கள்.

—ஊர்சுற்றி

## 'படித்த வாலிபருக்கு காணி கொடுக்கப்படும்'

கெக்கிராவ புதன்

'வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதன்பொருட்டும் கமத்தொழில் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் தேசிய அரசாங்கம் படித்த இளைஞர்களுக்கு காணி வழங்க முடிவு செய்துள்ளது' என்று காணி நீர்ப்பாசன மந்திரி திரு சி. பி. டி' சில்வா கெக்கிராவ நீர்ப்பாசன திணைக்களத்தை சம்பிரதாயமுறைப்படி திறந்து வைத்துப் பேசுகையில்குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வித் தேவைகளைப்பூர்த்தி செய்வதே மசோதாவின் நோக்கம்

## கல்வி மந்திரி விளக்கம்

### பல்கலைக்கழகங்களில் ஊழல்கள் மலியும் என்று வலப்பனை எம். பி. கண்டனம்

கொழும்பு, புதன் பார்லிமெண்டில் நடைபெற்ற உயர்கல்வி மசோதா மீதான விவாதத்தில் வலப்பனை எம். பி. திரு. ரி. பி எம். ஹேரத் (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி) பேசுகையில், கல்வி மந்திரியின் புதிய மசோதா நாட்டில் பெரும் குழப்பத்தையும் பல்கலைக்கழகங்களில் மேலும் ஊழல்களையுமே கொண்டுவருமென்று கண்டித்தார்.

"உத்தேச உயர்கல்வி மசோதாவில் கல்விமந்திரி ஒருபகுதியை மட்டுமே காட்டியுள்ளார். மிகுதியை அவர் மறைத்துவிட்டார். நாட்டின் எதிர்காலக் கல்வி முறை பற்றிய தமது கொள்கையை பூரணமாக விளக்கவும் மந்திரி தவறிவிட்டார்'' என்றும் திரு. ஹேரத் தெரிவித்தார்.

"பிரிவினுக்களுக்கு மாறானவர்"

''நாட்டிலுள்ள இரண்டு பிரிவினுக்களுக்கும் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது. சமயக் கல்வி நாட்டுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை மந்திரிகள் மட்டுமின்றி பாராளுமன்ற அங்கத்தவர்களும் உணர்ந்திருக்கின்றனர். இந்த வகையில் சமயக் கல்வியைப் பரப்புவதில் பல்கலைக்கழக பிரிவினுக்களுக்கு அதிக பொறுப்புண்டு. பல்கலைக்கழகங்களில் குறைபாடுகள் காணப்பட்டால் அவற்றை நிவர்த்திப்பது மந்திரியின் கடமையாகும். ஆனால் இதற்குப் பதிலாக கல்விமந்திரி வித்தியோதய வித்தியலங்காரப்பல்கலைக் கழக பிரிவினுக்களை ஒழித்துக்கட்ட முயற்சிக்கின்றார். இதனுடன் தமது புதிய உயர் கல்வி மசோதாவின் மூலம்பல்கலைக்கழக செனட்டையும் ஒழித்து புதிய சபையொன்றை நிறுவவும் முயல்கிறார். உயர்கல்வி நகல் மசோதாவை மந்திரி வரைந்திருக்க மாட்டார். ஆனால் நகல்மசோவை வரைந்தவர் நாட்டில் பௌத்த கல்வியை ஒழிக்கும் நோக்கத்துடனிருந்திருக்கிறார்'' என்றும் திரு. ஹேரத் கூறினார்.

''கல்வி மந்திரி திரு. ஐ எம். ஆர். ஏ. இரியகொல்லை, 1958-ம் ஆண்டிலேயே பல்கலைக்கழக பிரிவினுக்களை எதிர்த்தவர். இந்த மனப்பான்மை அவருக்கு இப்பொழுதும் இருந்துவருகிற'' என்றும் அவர் கண்டித்தார்.

''பல்கலைக்கழக பிரிவினுக்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு கல்விமந்திரி வழிவகுக்கவேண்டும். குறிப்பாக இதுவரை காலமும் பிரிவினுக்கள் இயக்கிவந்த முறையில் அவை தொடர்த்து செயல்பட அனுமதிக்க வேண்டும். இதுதான் நாம் விரும்புவது. மற்றைய மதங்கள் தங்களது பெயரில் பல்கலைக்கழகங்களை நிறுவுவதை எதிர்க்கட்சியினர் எதிர்க்கவில்லை'' என்றும் திரு. ஹேரத் தெரிவித்தார்.

''கல்வி இலாகாவை சேர்ந்த டாக்டர் குருகே போன்றவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற நாம் எப்பொழுதும் தயாராக இருக்கின்றோம்'' என்றும் அவர் சொன்னார்.

"ஊழல்கள் மலிந்துவிடும்"

''கல்விமந்திரியின் உயர் கல்விமசோதாவினால் பல்கலைக்கழகங்களில் ஊழல்கள் மேலும் மலிந்துவிடும்'' என்றும் திரு. ஹேரத் எச்சரிக்கைசெய்தார்.

என். எம் கோரிக்கை

எட்டியாந்தோட்டை எம். பி. டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்குத் தாம் வரவில்லை என்றும் உயர்கல்வி மசோதா குறித்து ஆராய்வதற்கு எதிர்க்கட்சியினருக்கு மேலும் அவகாசம் அளிக்கப்பட வேண்டுமென்றும் கூறினர்.

"பிரச்னையான மசோதா"

''கல்வி மந்திரியின் புதிய உயர்கல்வி மசோதா பிரச்னைக்குரியது. இம் மசோதா முழுவதையும் நிறைவேற்றுவது மிகவும் கடினமானது'' என்றார் டாக்டர் என். எம். பெரேரா.

பிரதமர் கருத்து

''உயர் கல் மசோதா மிகவும் முக்கியமானது. இதனை நுணுக்கமாக ஆராய்ந்து அமுல்செய்ய வேண்டுமென்பதை நானும் ஏற்றுக்கொள்கின்றேன்''. மசோதாவைப் பொறுத்த மட்டில் இதனை நாம் கட்சி அரசியலுக்கு மேலாக நோக்கவிரும்புகின்றோம். இம் மசோதாவை அவசரம் அவசரமாக நிறைவேற்றுவது எமது நோக்கமல்ல. ஆனால் சில கஷ்டங்கள் எம்மை எதிர்நோக்கியுள்ளன என்பதை அறிவோம்'' என்று பிரதமர். டட்லி சேனநாயக்கா தெரிவித்தார்.

"திருத்தங்களை ஏற்போம்"

உயர்கல்வி மசோதா குறித்து தெரிவிக்கப்படும் எந்தத் திருத்தங்களையும் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கின்றோம். ஆனால் அவை எமக்கும் திருப்தியளிக்கவேண்டும். எங்களின் கஷ்டங்களை கௌரவ அங்கத்தத்தவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கின்றேன்'' என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பீலிக்ஸ் பாய்ச்சல்

தொம்பே எம். பி, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார

---

பார்லிமென்டில்

---

நாயக்கா (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அடுத்து பேசுகையில், உயர் கல்விமசோதாவை பார்லிமெண்டில் கல்விமந்திரி தாக்கல்செய்யும்பொழுது அவர்சிங்களத்தில் வாசிக்கவில்லை என்று கண்டித்தார்.

கல்வி மந்திரி விளக்கம்

சில நிமிடங்களின் பின்னர் கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை உயர்கல்வி மசோதாவை இரண்டாவது தடவையாக வாசித்தார்.

''கல்விமுறையை திருத்தி அமைக்கவேண்டுமென்ற அவசியம் இன்று நேற்று எழுந்ததல்ல கல்விக் கொள்கையில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டுமென்பதை எம். பிக்களே பல தடவைகளில் கோரியிருந்தனர் என்றார் திரு. இரியகொல்லை.

"பல்கலைக்கழக கல்வி"

''பல்கலைக் கழகமொன்று நாட்டில்நிறுவப்படவேண்டுமென்று 1914-ல் தீர்மானிக்கப்பட்டது ஆனால் முதலாவது உலக யுத்தம் காரணமாக இது அமுல்படுத்தப்படவில்லை. 1917ம் ஆண்டில் இத் தீர்மானம் மீண்டும் புனராலோசனை செய்யப்பட்டு 1920-ல் முதலாவது பல்கலைக் கழக கல்லூரி அமைக்கப்பட்டது. 1942ல் சேர் ஐவர் ஜெனிங்ஸ் பொறுப்பேற்கும் வரை இக்கல்லூரி [illegible] வந்தது. இதன்பின்னர் [illegible] பல்கலைக் கழகமொன்று நிறுவப்பட வேண்டுமென்று அவர் சிபார்சு செய்திருந்தார். 1956ல் இரண்டு புதிய பல்கலைக்கழக பிரிவினுக்கள் நிறுவப்பட்டன. அப்பொழுதுதான் நாட்டில் கலாச்சார, மத மறுமலர்ச்சி ஆரம்பமான காலமாகும் இதன் பலனாக வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவினுக்கள் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றன. ஆனால் உண்மையில் என்ன நிகழ்ந்தது? பொது அமைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத்தைப் போன்றே இந்த இரண்டு பிரிவினுக்களும் அமைந்துவிட்டன இது எமக்குத் தேவையில்லை மக்கள் விரும்புவது காலனி அமைப்பில்லாத மத, கலாச்சார அடிப்படையில் அமையப்பெற்ற பல்கலைக்கழகங்களைத் தான். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அமைப்பு முறைகள் நன்றாகவில்லை. அங்கு ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன. ஆசிரியர்கள், மாணவர்கள் மீது நேரடியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடிகிறது. மாணவர்கள் அரசியல்வாதிகளின் கைகளில் அகப்பட முடிகிறது. இக்கட்டத்தில் பல ஒழுங்கீனங்களும் அங்கு தலைகாட்ட முடிகிறது. பல்கலைக்கழகங்களில் நாம் மாணவர்களைக் கட்டுப்பாடற்ற முறையில் அனுமதிக்கின்றோம் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கையாளப்படும் நடைமுறைகளின் படி இக்கல்வி நிலையங்கள் பற்றி உபவேந்தரின் அனுமதியின்றி கல்விமந்திரியினால் கூட எதுவும் அறிய முடியாது இந்த முறை அகற்றப்படவேண்டும் தற்பொழுது நான் சமர்ப்பித்திருக்கும் உயர் கல்வி மசோதா நாட்டு மக்கள் அனைவரினதும் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரே நோக்கம் கொண்டது செனட், கனிஷ்ட பல்கலைக்கழகங்கள், உயர்தரப் படிப்புகளுக்கான தேசிய சபை ஒன்றையும் நாங்கள் நிறுவப்போகின்றோம் உயர் கல்வி மசோதா பல ஆக்க பூர்வமான திட்டங்களை நிறைவேற்றக்கூடியது என்பதில் சிறிதும் ஐயமில்லை'' என்று மந்திரி திரு ஐ எம் ஆர் ஏ இரியகொல்லை தெரிவித்தார்.

---

### உதவி மந்திரியின் உறுதிமொழி

பொல்காவலை, புதன் 'நல்ல பொருட்கள் விளையக்கூடிய காணிகளை அரசாங்கம் ஒருபோதும் எடுக்க மாட்டாது. இதை நான் தேசிய அரசாங்கத்தின் சார்பில் கூறுகின்றேன்' என்று உதவி உணவுமந்திரி திரு பி சி இம்புலான கேகாலை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

---

### 'தமிழ்மசோதாவுக்கும் வேலைநிறுத்தத்துக்கும் சம்பந்தமில்லை

திருக்கோணமலை, புதன் ஜனவரி 8-ம் திகதி நடைபெற்ற வேலைநிறுத்தம் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ்மொழிச்சட்ட மசோதாவை எதிர்க்கும் நோக்குடன் நடத்தப்படவில்லை. இந்த மசோதாவை பொது மக்கள் படித்து தங்கள் கருத்தைத் தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்கவில்லை யென்ற காரணத்திற்காகவே எதிர்த்தோம்' என்று அரசாங்க பொதுச்சேவை சங்கத் தலைவர் திரு. பி, ஆடிப்பொல திருகோணமலை இந்துக் கல்லூரிமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

---

### 8 வயதுச் சிறுமியை நர்ஸ் இம்சித்தார்

இரத்தினபுரி, புதன் 8 வயதுச் சிறுமியை அடித்தும், எரிகாயங்கள் ஏற்படுத்தியும் இம்சித்ததாக இரத்தினபுரி ஆஸ்பத்திரியைச் சேர்ந்த நர்ஸ் சுமனா குணவர்த்தன என்பவர் இரத்தினபுரி நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டார். அவர் பின்னர் 500 ரூபா பிணையில் விடப்பட்டார்.

வழக்கு விசாரணை அக்டோபர் 11ந் தேதி ஆரம்பமாகும்.

---

### சைவ பரிபாலனசபை உபசபை அமைப்பாளர்

யாழ்ப்பாணம், வியா சைவபரிபாலன சபையின் கூட்டம் திரு. த முத்துசாமிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் உபசபை அமைப்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

சமயப் பிரசாரம்; சித்தாந்தசிரோமணி மு. மயில்வாகனம், புண்ணிய நாச்சி தருமம்: திரு. இரகுநாத முதலியார், பரீட்சை: திரு. மு. வைத்தியலிங்கம், அச்சகம்: அச்சக அதிபர் திரு. ஐ. சின்னத்துரை, பத்திரிகை பாடநூல்கள்: வித்துவான் க. கணபதிப்பிள்ளை.

---

## யாழ். திறந்த வெளிஅரங்கில் நாடக விழா

### அடுத்தமாதம் இடம்பெறும்

யாழ்ப்பாணம், புதன் யாழ் பிரதேச கலாமன்ற அனுசரணையின் கீழ் ஆகஸ்ட் மாதம் 26, 27, 28, 29-ந் திகதிகளில் யாழ். திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கும் கலைவிழாவில் நாடகமும் ஓர் அம்சமாக அமைந்துள்ளது. இவ்விழாவில் பங்குபற்ற 50 நாடக மன்றங்கள் மனுச்செய்திருந்தன. ஆனால் ஆறு நாடக மன்றங்களே கால் இறுதிப் போட்டியில் செலவு செய்யப்பட்டன. அவை வருமாறு:

பாஷையூர் வளர் பிறை நாடகமன்றம், திருநெல்வேலி கலாமன்றம், பருத்தித்துறை தாகூர் நாடக மன்றம், குருநகர் நாடக மன்றம், பருத்தித்துறை ஞானசம்பந்தர் நாடகமன்றம், அரியாலை நாடகமன்றம்.

இருபத்திநான்காம் திகதி நடைபெற்ற இறுதித் தெரிவில் பின் வரும் நாடக மன்றங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வளர்பிறை நாடகமன்றம் (கண்டி அரசன்), தாகூர் நாடகமன்றம் (அம்பிகாவதி), திருநெல்வேலி, கலாமன்றம் (இலட்சிய வீரன் - துட்டகைமுனு), அரியாலை நாடகமன்றம் . (பாதுகை). இந்நாலு நாடகங்களும் நாலு நாட்களிலும் யாழ் திறந்தவெளியரங்கில் அரங்கேற்றப்படும. இறுதித்தெரிவில் திருவாளர்கள் கலையரசு சொர்ணலிங்கம், இ மகாதேவன், எஸ். செல்வரத்தினம் ஆகியோர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்கள்.

---

## உள்ளத்தை கனியவைக்கும் கதிர்காமத்து கண்கொள்ளாகாட்சி!

கதிர்காமம், புதன் உள்ளத்தை உருகவைத்து மெய்சிலிர்க்க வைக்கும் ஆயிரக்கணக்கான பக்த கோடிகளின் பக்திச்சுவைப் பாடல்கள் கதிர்காமத்தில் எங்கும் எதிரொலித்த வண்ணமிருக்கின்றது. கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் அங்குமிங்குமாக பஜனை பாடியபடி கால் நடையாகச் செல்லும் அடியார் கூட்டத்தின் அருள்வேட்கை உள்ளத்தைக் கனிய வைப்பதாக இருக்கிறது.

ஆயிரக்கணக்கான அடியார் கூட்டம் கோஷ்டி கோஷ்டியாக பக்திப்பரவசத்தினால், இறைவன் நாமத்தை உச்சரித்துப், பஜனை பாடியும், 'அரோகரா' கோஷமிட்டும் கால் நடையாகச் செல்லக் கதிர்காமத்தை நோக்கிச் செல்லும் காட்சி இங்கு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது

மனதைக்கவரும் மாணிக்கக்கங்கையின் ஓரத்திலே இயற்கை அன்னைக்கு மத்தியிலே செல்லக் கதிர்காமம் என்னும் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோயில் கதிர்காமப் புனிதஸ்தலத்துக்கு மேற்கே மூன்று மைல் அப்பால் இந்த இறைவன் சந்நிதி இருக்கிறது

செல்லக் கதிர்காமத்தை நோக்கிப் போகும் பக்த கோடிகளுக்கு கொதிக்கும் வெய்யில் குளிர்ச்சி தரும் பால் நிலவாக இருக்கிறது.

பல்லாயிரக் கணக்கான இந்துக்களுடன் பௌத்தர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களும் சுவாமி தரிசனத்துக்காக வந்துள்ளனர்.

கதிர்காமத்திலுள்ள வள்ளியம்மன், தெய்வானை தேவஸ்தானத்தில் பக்தர்கள் தினமும் முருகன் நாமப் பஜனை செய்தவண்ணமிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாஸ்ய சுரங்கம்

ஒரு கூட்டத்திற்கு டி. கே. சிதம்பரநாதமுதலியார், ம. பொ. சிவஞானகிராமணி, 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி இம் மூவரும் பேச்சாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

பேச்சாளர்களைப் சபைக்கு அறிமுகப்படுத்திய அன்பர் இன்று மும்மணிகளைப் பேசுவதற்கு அழைத்திருக்கிறோம் என்று அறிமுகம் செய்து வைத்தார்.

'கல்கி' பேச எழுந்து நின்று, தங்களை அறிமுகப் படுத்தியவர் கூறியதைக் குறிப்பிட்டு, 'டி. கே. சி. ஒரு ரஸிகமணி, ம பொ. சி. ஒரு கிராமணி. மூன்றாவது மணியாயிருக்க நான் ஒரு பெண் மணி கூட இல்லையே!' என்றார்.

ஃ ஃ ஃ

காலஞ்சென்ற எஸ். ஜி. கிட்டப்பா ஒரு சமயம் சென்னையில் நடந்த ஒரு வழக்கில் சாட்சிசொல்லப் போயிருந்தார்.

அவர் கட்சிக்கு எதிராக வாதாட பிரபல ஆங்கில பாரிஸ்டர் ஏர்ட்லி நோட்டன் ஆஜராகியிருந்தார். இவர் கிட்டப்பாவை பல குறுக்குக் கேள்விகள் கேட்டு நீதியற்ற முறையில் அவரை மட்டந்தட்டப் புறப்பட்டார்.

'மிஸ்டர் கிட்டப்பா, நீர் ஒரு நாடகமேடை நடிகர் அல்லவா?'

'இது உங்களுக்குத் தெரியாதா?' என்று கிட்டப்பா திருப்பிவிட்டார்.

'இது ஒரு இழிவான தொழில் அல்லவா?'

'அதென்னவோ எனக்குத் தெரியாது. என் தந்தை செய்த தொழிலைவிட என் தொழில் மேன்மையானதென்று நான் நினைக்கிறேன்'

'உம்முடைய தந்தையார் தொழில் என்னவோ?'

'அவர் ஒரு பாரிஸ்டர்!'

— புலவர் உசேன் 'தமிழ் தேச'னில்.

ஃ ஃ ஃ

ஒரு வெள்ளைக்காரத்துரையிடம் ஏராளமான தோட்டந்துரவுகள் இருந்தன. அவர் ஒரு கோடீஸ்வரன். அவரிடம் நெடுங்காலம் வேலைசெய்து அவருடைய நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள் மூன்றுபேர். ஒருவர் சிங்களவர், இன்னொருவர் பறங்கியர், மற்றவர் யாழ்ப்பாணத் தமிழர்.

துரை தமது மரண சாஸனத்தில் பின் கண்டவாறு எழுதியிருந்தார். நான் இறந்தபின் என்னுடைய சொத்துகள் யாவும் மூன்றாகப் பிரிக்கப்பட்டு இந்த மூவருக்கும் சமமாகப் பங்கிடப்படவேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை என்னுடைய பிரேதப் பெட்டிக்குள் இந்த மூவரும் ஆளுக்கு நூறு ரூபாயாக முன்னூறு ரூபாய் போட்டு அதோடு சேர்த்து என்னை எரிக்கவேண்டும்.'

துரை மரணமடைந்த தினத்தில் இந்த சாஸனம் பகிரங்கமாக வாசிக்கப்பட்டது. சிங்களவர் உடனே தமது பணப்பையிலிருந்து நூறு ரூபாவை நோட்டுகளாக எண்ணிப்போட்டுவிட்டார். பறங்கியரும் அப்படியே செய்தார். யாழ்ப்பாணத்தவரின் முறைவந்தது.

அவர் பிரேதப் பெட்டியையும் அதற்குள் இருந்த இருநூறு ரூபாயையும் பார்த்துவிட்டு, சிறிது நேரம் ஆலோசித்தபின், சட்டைப் பையிலிருந்த தமது 'செக்' புத்தகத்தை எடுத்து, அதில் வெள்ளைக்காரத் துரையின் பேரில் 300 ரூபாய்க்கு ஒரு 'செக்' எழுதி, அதைப் பிரேதப் பெட்டிக்குள் போட்டுவிட்டு, அதற்குள்ளிருந்த 200 ரூபாய் காசையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்!

துரையோடு 'செக்'கும் சாம்பலாகிவிட்டது ஆனால் யாழ்ப்பாணத்தவரின் கடமைமுடிந்துவிட்டது தானே?

தகவல்: ஷடா

# இசைக் கலப்பு

அமீர் குஸ்றூ என்ற பெரும் பாடகர் சுல்தான் அலாவுதீனின் அரண்மனை வித்வானாக இருந்து வந்தார் பாரசீகப் பாடல் முறையையும் இந்திய பாடல் முறையையும் கலந்து 'கவாலி' என்ற முறையை புகுத்தியவர் அவரே தான். தென்னிந்திய வீணையின் அமைப்பில் 'சிதார்' என்ற வட இந்திய வாத்தியத்தைமுதல் முதலில் புழக்கத்துக்குக் கொண்டு வந்தவரும் அவரே.

எப்பேற்பட்ட சங்கீதமாயினும் சரி, ஒருவர் அதைப் பாடுவதை ஒருமுறை கேட்டாராஞல் அதை உடனே திருப்பிப் பாடும் வல்லமை குஸ்றூவுக்கு இருந்தது.

விஜயநகர சாம்ராஜ்யத்து வித்துவான் கோபால நாயக்கர் ஒரு சமயம் அலாவுதீன் தர்பாரில் கர்நாடகசங்கீதம் பாடியதை குஸ்றூ சுல்தானின் சிம்மாசனத்துக்குகீழே ஒழித்திருந்து கேட்டு விட்டு திருப்பி அதை அச்சோட்டாகப் பாடினாராம்.

முகலாய சக்கரவர்த்திகள் தட்சண பூமியை வெற்றிகொண்டு வட நாடு திரும்பியபோது சங்கீதகலைஞர்களையும் இதர கலைஞர்களையும் தங்களோடு அழைத்துச் சென்று அவர்களுடைய கலைகளைப் பயின்றார்கள். கர்நாடக சங்கீதத்துக்கும் ஹிந்துஸ்தானிய சங்கீதத்துக்கும் இடையில் இப்படித்தான் ஒன்றுமை உருவானது

அடுத்த
பஞ்சாமிர்தம்
4-8 66

# அதிர்ஷ்டத்தின் சூத்திரம்

வைகுண்ட ஏகாதசி திருவிழாவுக்கு (ஸ்ரீரங்கம்) கோவிலின் உட்பிரகாரங்களில் கீற்றுக் கொட்டகை போட்டு, அதில் பல வகைப்பட்ட கடைகள் வைப்பதற்கு ஏற்பாடு செய்வது வழக்கம்... ஜாலவேடிக்கை, கடிகாரங்கள், இரண்டு தலை ஐந்து காலுள்ள மாடு, பேசும்பானை, பிரைஸ் சீட்டுக்கடைகள் இவைகளும் இருக்கும். என்னுடைய கவனம் முற்றும் பிரைஸ் கடைகளில் தான் செல்லும். குண்டூசி முதல் நிலைக்கண்ணாடி வரை சகல சாமான்களும் விற்பதற்காக பகட்டாகப் பரவி வைத்திருப்பார்கள். வியாபாரம் அதிகரிப்பதற்காக பிரைஸ் சீட்டுப் போடுவார்கள். சீட்டுகளில் பிளாங்கியே இல்லை. ஒவ்வொரு சீட்டுக்கும் ஏதாகிலும் ஒரு சாமான் கிடைக்கும். சீட்டின் விலை காலணா.

காலணா போடுபவர்களில் ஒருவருக்காவது ஒரு பைஸா அல்லது இரண்டு பைசா பெறுமானத்திற்கு மேலான சாமான்கள் கிடைப்பதே இல்லை. அதைக் காட்டிலும் விலையுயர்ந்த சாமான்கள் பகட்டாக அடுக்கி வைத்திருந்தபோதிலும் அவற்றில் ஒருவருக்கும் கிடையாது. இப்படியே மோசம் செய்தால் வியாபாரம் அதிக நாள் நடக்காதென்று தெரிந்த முதலாளி இதற்கு உள் ஆள் வைத்து வேலை செய்வதுண்டு. அதற்காக சிறு பையன்களைப் பிடிப்பது வழக்கம். சாயங்கால நேரத்தில் கூட்டம் அதிகமாக இருக்கும் சமயத்தில் இந்த உளவுப் பையன் வந்து சீட்டுப் பொறுக்குவான்.

குண்டூசி இரண்டு என்று எழுதியிருந்தால் சீட்டை வாசிக்கும் கடைக்காரன் நிலைக்கண்ணாடி ஒன்று என்று படித்துவிட்டு காகிதத்தை சுருட்டி பெட்டியில் போடுவான். பார்ப்பவரெல்லோரும் கண்டு பிரமிக்க ரூபாய் ஒன்று அல்லது இரண்டு பெறுமதியான கண்ணாடியை அந்தப் பையன் எடுத்துச்சென்று வீட்டில் வைத்திருப்பான். இரவு முதலாளி வந்து அரை அணா முதல் ஓர் அணா வரையில் அதற்குத் தரகு கொடுத்து கண்ணாடியைத் திருப்பி வாங்கிக்கொண்டு போய்விடுவான்.

அந்த அதிர்ஷ்ட ஏலத்திற்கு தினம் ஒரே பையன் வந்து விலையுயர்ந்த சாமான்களை எடுத்துக்கொண்டு போனால் சந்தேகத்துக்கிடமுண்டாகும் ஆதலால் பல பையன்களை இந்த வேலையில் ஈடுபடுத்த முதலாளி முயற்சிப்பான். என்னை இரண்டு நாள் கவனித்த பிறகு அந்த முதலாளி 'என்ன சாமி, சும்மா வந்து நிக்கிறே? சீட்டுப் போடுகிறதில்லையா?' என்று விசாரித்தான். கையிலே காசு இல்லை, சாயபு என்று பதிலளித்தேன். 'நான் தர்ரேன் சாமி, போடு' என்று சொன்னவுடன் என்னையும் உளவுப் பையன் சேனையில் சேர்த்துக்கொள்ள நிச்சயித்து உபதேசம் செய்துவிட்டான். அன்று வீட்டிற்குத் திரும்பும்பொழுது கையில் அழகான வேலைப்பாடுள்ள சிறிய பெட்டியும், மடி நிறையச் சூடான பட்டாணிக் கடலையுமாகத் திரும்பினேன். கண்ணாடிப் பெட்டியை வீட்டில் உள்ளவர்களுக்குகாண்பிக்கப்பயம் ஆகையால் வெகு கஷ்டப்பட்டு அதை ஒளித்து வைத்திருந்து இரவு சாயபுவிடம் திருப்பிக் கொடுத்து விட்டேன்.

அந்த ஒரு நாள் வேலைக்கு அரையணா கூலி. அதற்கு கால்படி பட்டாணி வாங்கி நானும் என் உடன்பிறந்தவர்களும் மற்ற நெருங்கிய நண்பர்களும் ஆனந்தமாக நெடுநேரம் சாப்பிட்டோம். ஆனால் இந்த ரகசிய வேலையின் நிமித்தம் கிடைத்த ஊதியத்தைப் பற்றி மாத்திரம் ஒருவரிடமும் சொல்லவில்லை.

பொது மக்கள் ஏன் அதிர்ஷ்டத்தை நம்பி மோசம் போகவேண்டும்? இதுகல்விக் குறைவா? நாகரிகக் குறைவா? இரண்டும் இல்லை. மனிதனுடைய இயற்கை நம்பிக்கையெனத் தோன்றுகிறது. கிடைக்கக் கூடாததை விரும்புவது, பார்க்க முடியாததைக் காண முயலுவது, கட்டுக்கடங்காததை அடக்க எத்தனிப்பது, பேரின்பத்தை சிற்றின்பங்களால் அனுபவிக்கக் கூடுமென நினைப்பது — இவை மனித வர்க்கத்துக்கு இன்றியமையாத குணங்கள். இவைகளை மாற்றுவதே சிருஷ்டியின் தத்துவம்.

—டாக்டர் தி. செ. சௌ. ராஜன்.

# பஞ்சாமிர்தம்

தயாரிப்பு:- வி. என். பி.

# 'பாத்துப்பணிக்கு பெரியநம்பி சாப்பணிக்கு சின்னநும்பி'

சென்றவாரம் இப்பத்தியில் சில பரிபாஷைகளைப் பற்றிய குறிப்புகள் வெளிவந்தனவல்லவா? அதை வாசித்த வட்டுக்கோட்டை 'மக்கள் கவிமணி' மு. இராமலிங்கம் அவர்கள் மேலும் சில பரிபாஷைச் சொற்களை அனுப்பிவைத்திருக்கிறார். நாட்டுப்பாடல்களிலும்கிராமிய வழக்குகளிலும் கிராமத்தவருடைய பேச்சு, பழக்க வழக்கம் முதலியவற்றில் ஊறித் திளைத்துப் போயிருக்கும் அவர் இத்யாதி விஷயங்களில் அக்கறை கொண்டிருப்பது இயல்பே.

சுமார் நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பணம், இரண்டு பணம் என்றே காசை அளந்து வந்தோம். ஒரு பணம் என்றால் ஆறு சதம். நாலுபணம் இருபத்துநாலு சதம் என்றாலும் அது கால் ரூபாயான 25 சதத்தையே குறித்து வந்தது. இப்படியே எட்டுப்பணம் அரை ரூபாய், 12 பணம் முக்கால் ரூபாய் அப்பொழுதெல்லாம்பொருட்களின் விலை இப்போதிருப்பதை விட எத்தனையோ மடங்கு குறைவு: ஒரு கொத்தரிசி எட்டு சதம். ஒரு தேங்காய் மூன்றுசதம். ஒரு கோழிமுட்டை இரண்டரை சதம். ஆமாம். அப்பொழுது அரைசதமும் கால் சதமும்கூட புழக்கத்தில் இருந்தன. இன்று பிச்சைக்காரனுக்கு ஒரு சதம் போட்டால் அவன் முகத்தில் வீசி எறிந்துவிடுவான்!

நாலு பணத்துக்கு ஒரு கோழிக் குஞ்சு வாங்கலாம் அந்தக்காலத்தில். இன்றைக்கு அதே அளவு கோழிக் குஞ்சு மூன்று ரூபாய்க்கும் கிடைப்பதரிது. எனவே அப்பொழுது ஒரு பணத்தையே சாதாரண நாணய அளவாக வைத்திருந்தார்கள்.

சென்றவாரக் கட்டுரையில் குறிப்பிட்ட அந்த வகுப்பினர் ஒரு பணத்துக்கு 'சாப்பணி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இரண்டுபணம் 'துவாப்பணி', மூன்றுபணம் 'திலுப்பணி'- இப்படியே.

சென்றவாரம் வெளிவராத வேறு சில சொற்கள் வருமாறு: பெரியநும்பி—நெல்; சின்னநும்பி—வரகு, சாமை. கவியல்—வீடு. வளையம்—காலை. நெடுகிறது—வருகிறது. சோருகிறது—தருகிறது.

யாழ்ப்பாணத்தில் முன்பு ஏராளமாகக் காணப்பட்ட, ஆனால் இக்காலத்தில் குறைந்து கொண்டே வரும், இன்னொரு வகுப்பார் பழங்கும் சில பரிபாஷைச் சொற்களையும் 'மக்கள் கவிமணி' அனுப்பியுள்ளார். இவ்வகுப்பினருக்கு நெல், அரிசி, [illegible] லிய உணவுப் [illegible] டன் நெருங்கிய தொடர்புண்டு. ஆதலால் முக்கியமாக அந்தப் பண்டங்களுக்கே மறை பாஷை வைத்திருக்கிறார்கள். அவர்கள் கையாண்ட பரிபாஷைச் சொற்கள் வருமாறு:

சோறு-போனம். நெல்லு-கோண்டிவிதியல், வரகு-பறட்டை, விதியல், அரிசி-தண்டவம், கத்தரிக்காய் முதலிய மரக்கறி - கூட்டன், பயறு - உறுக்கலன், வாழைப்பழம்-பண்டில், மீன்-சிராமல், இறால் - முடக்கன்சிராமல், இறைச்சி - அசையன், தேங்காய் - கிடலை, வெற்றிலை - முல்லையன், பாக்கு - தாவங்காய், புகையிலை - வாட்டுவான், வேளாளன் - வைப்புக்கழுகன், சான்றான் - சிராமைக்கழுகன், நாவிதன் - நகரக்கழுகன்.

'போனம் பாணமாயிருக்கிறது' என்றால் சோறு போதாது என்று அவர்களுடைய அர்த்தம்.

மேலே தரப்பட்ட சொற்கள் யாவும் 1879-ம் ஆண்டில் வெளிவந்த 'உதயதாரகை' இதழ்களில் காண[illegible] திரு. இராமலிங்கம் தெரிவிக்கிறார்.

# பெயரில்லாத சமயம்

உலகில் பலவித சமயங்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனிப்பெயர் உள்ளது. அப்பெயர்கள் அந்தந்த சமயத்தை ஸ்தாபித்தவர்களைக் காட்டுகின்றன. புத்தசமயம், மகம்மதியம், கிறிஸ்தவம், சைனசமயம் என்பவை உதாரணங்கள். இவை எல்லாம் தனிப்பட்டவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சமயங்கள். உலக சரித்திரத்தில் ஒவ்வோர் காலங்களில் அவை ஸ்தாபிக்கப்பட்டன அவற்றின் ஸ்தாபகர்கள் மிகவும் தெய்வத்தன்மை வாய்ந்த அவதார புருஷர்கள், தங்களது நெறிவழியே பிறரையும் வசீகரிக்கும் சக்தி அவர்களிடமிருந்தது. பலர் அவர்களைப் பின்பற்றினார்கள்.

எங்கள் சமயத்தைச் சேர்ந்த, ஆங்கிலம் படித்த ஒரு வாலிபனை 'உன் சமயம்' என்னவென்று கேட்டால் அவன் 'இந்துசமயம்' என்று பதிலளிப்பான். கிராமத்தில் வாழும் ஒரு குடியானவனிடம் அந்தக் கேள்வியைக் கேட்டால் அவனுக்கு தன்னுடைய சமயத்தின் பெயர் தெரியமாட்டாது. 'இந்துசமயம்' என்றபெயர் நமது முன்னோர்களுக்கு தெரியாது. இப்பொழுதுள்ள சாதாரண மனிதனுக்கும் தெரியாது.

எங்களுடைய சமயத்தின் பெயர் என்ன? உண்மை என்னவென்றால் அதற்குப் பெயரே கிடையாது. இது விசித்திரமானதாகத் தோற்றலாம். ஆனால் அதில் விசித்திரம் ஒன்றுமில்லை. சற்று யோசித்துப் பாருங்கள் ஒரு பொருளுக்கு எப்பொழுது, எதற்காக ஒரு பெயர் வைக்கப்படுகிறது. ஒரு பொருளைப் போல வேறும் பல பொருட்கள் இருக்கும்போது அதன் தனித்தன்மையைக் காட்டுவதற்காகவே அதற்குப் பெயர்ஒன்று சூட்டுகிறோம். ஒரு பொருளில ஒன்றே ஒன்று இருந்தால் அதற்கு பெயர்வைக்க வேண்டிய அவசியமில்லை.

இதைப்போலத்தான் எங்கள் சமயத்துக்கு பெயர் வைக்கவேண்டிய அவசியம் உண்டாகவில்லை மற்ற சமயங்கள் அவற்றின் ஸ்தாபகர்கள் காலத்துக்கு முன் இருக்கவில்லை. எங்கள் சமயமோ, ஸ்தாபிக்கப்பட்ட சமயங்களுக்கு எவ்வளவோ காலத்திற்கு முன் இருந்து வந்தது.

காஞ்சி - ஸ்ரீசங்கராச்சாரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வெள்ளிக்கிண்ணம் இங்கிலாந்துக்கு கிடைக்குமா?

## மே. ஜெர்மனியுடன் இங்கிலாந்து 30-ந் திகதி மோதுகிறது

லண்டன், ஜூலை 27

**உலக வெள்ளிக் கிண்ணத்துக்காக நேற்று வெம்பிளியில் நடைபெற்ற உதைபந்தாட்ட அரை இறுதிப் போட்டியில், போர்ச்சுக்கலை இங்கிலாந்து தோற்கடித்து, இறுதித் தெரிவுப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது!**

இங்கிலாந்துக்கும் போர்சுக்கல்லுக்குமிடையே நேற்று நடைபெற்ற அரை இறுதிப் போட்டி இதுவரை நடைபெற்ற உலக வெள்ளிக் கிண்ணப் போட்டிகளிலும் பார்க்க சிறப்பு வாய்ந்திருந்ததாகக் கூறப்பட்டது.

நேற்று நடைபெற்ற போட்டியில், இடைவேளைக்குள் இங்கிலாந்து இரண்டு கோல்களை அடித்து விட்டது. ஆனால் போர்ச்சுக்சல் கோல் எதுவுமே போடவில்லை. இடைவேளைக்குப் பின்னர் போட்டி முடிவடைவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பாகத்தான் போர்ச்சுக்கல் தனது முதல் கோலை அடித்தது. நேற்றைய ஆட்டம் விறுவிறுப்பாக இருந்ததாக உதைபந்தாட்ட விளையாட்டு சங்கத்தினர் கூறினர்.

### இங்கிலாந்துக்கு சாதகமான நிலை

30-ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் இறுதிப் போட்டியில், இங்கிலாந்துடன் மேற்கு ஜெர்மனி மோதிக் கொள்ளுகிறது. இப்போட்டியில் அநேகமாக இங்கிலாந்து கோஷ்டியே வெற்றி பெறலாமென்றும் இதன் பக்கமே சாதகமான நிலை உருவாகியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

# உலக பசிப்பிணியை நீக்க சுய உதவி அத்தியாவசியம்

## விவசாய காரியதரிசி வலியுறுத்து

வாஷிங்டன், ஜூலை 27

உணவுப் பற்றுக்குறையுள்ள நாடுகள் கடந்த காலத்தைப் பார்க்கிலும் எதிர்வரும் ஐந்தாண்டு காலத்தில் தமது உணவு உற்பத்தியை அதிகரித்தாலொழிய 1980-ம் ஆண்டு வாக்கில் ஏற்படவிருக்கும் பஞ்சப் பிணியைத் தவிர்க்க முடியாதென விவசாயக் காரியதரிசி பிரீமன் குறிப்பிட்டார். ஏனெனில் அக்காலவரையில் அமெரிக்கா உள்ளிட்டு ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளின் உணவுக் கையிருப்பும் குறைந்துவிடும் என்றார்.

ஞாயிறன்று நடைபெற்ற 'பத்திரிகையைசந்தியுங்கள்' என்ற தேசிய டெலிவிஷன் நிகழ்ச்சியில் பேட்டியளித்த திரு. பிரீமன், உணவுக் கையிருப்பு குறைந்த நாடுகளுக்கு எக்காலம் வரையில் அமெரிக்கா உதவக்கூடுமென கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு இந்தியாவும், பாகிஸ்தானும் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை திரு. பிரீமன் பாராட்டினார். இவ்விரு நாடுகளுக்கும் இவர் அண்மையில் விஜயம் செய்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா 'பெரும் முயற்சி' எடுத்துவருவதாகக் குறிப்பிட்ட விவசாயக் காரியதரிசி இந்தியப் பொருளாதார அமைப்பின்கீழ் விவசாயத் திட்ட அமைப்பியலுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்திய விவசாய வரவு-செலவுத்திட்ட அதிகரிப்பை சுட்டிக்காட்டிய திரு. பிரீமன், 'இந்தியாவில் கிடைக்கக்கூடிய சிறந்த மூளைகளும், திறமையும்' உணவு உற்பத்திப் பிரச்னைகளை தீர்த்து வைப்பதில் கவனம் செலுத்திவருகின்றன என்றார்.

பாகிஸ்தான் பற்றிக் குறிப்பிட்ட விவசாயக்காரியதரிசி விவசாய வளர்ச்சி உற்பத்தியைப் பொறுத்தளவில் இந்தியாவைப் பார்க்கிலும் பாகிஸ்தான் முன்னேறியுள்ளது; இதன் கடந்த ஐந்தாண்டு கால சாதனைகள் அபிவிருத்தியடையும் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டு எனக் குறிப்பிட்டார்.

### யுதாண்ட்

மாஸ்கோ, ஜூலை 27

இங்கு விஜயம் செய்துள்ள ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் நேற்று ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினுடன் சுமார் மூன்று மணி நேரம் வரை பேச்சுக்கள் நடத்தினார்.

வியட்னாம் நெருக்கடி பற்றி யுதாண்ட் பேச்சுக்கள் நடத்தியதாக் கூறப்பட்டது.




### கொழும்பு

வியாழன் 28 - 7 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 6-45 இசை மெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6 45 தமிழோடிசை, 7-00 பேச்சு, 7-15 வாத்தியஇசை, 7-30 [illegible] 8-00 முஸ்லிம் [illegible] 9-15 மெல்லிசை, 9-30 நிலையஒலிப்பதிவுகள்.

### புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிழக்கு வீரபத்திர சன சமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் நிலைய மண்டபத்தில் திரு. மு. சிவராசா தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சு. சண்முகம், உபதலைவர்: திரு. கி. கமலநாதன், காரியதரிசி: திரு. வ. சிறிதரன், உபகாரியதரிசி: திரு. ந. சிவரெஞ்சம், தனாதிகாரி: திரு. சு. குலவீரசிங்கம் நிர்வாக சபை உறுப்பினர்: திருவாளர்கள் இ. பதிமநாதன், ம. செல்லையா. ந. கணபதிப்பிள்ளை.

### சன சமூக நிலைய கொழும்புக் கிளை

கொழும்பு, புதன்

மேலைக் கரம்பொன் ஆனந்தா சன சமூக நிலையக் கொழும்புக் கிளைச்சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. நிர்வாக அங்கத்தவர்கள் வருமாறு:

தலைவர்: திரு வை பாலகிருஷ்ணன், உபதலைவர்: திரு, பொன் இராஜரத்தினம், காரியதரிசி: திரு. அ சி. நவரெத்தினம். உபகாரியதரிசி: திரு ச. நித்தியானந்தன், தனாதிகாரி; திரு. க. பாலகிருஷ்ணன், உபதனாதிகாரி: திரு. பொன் பூபாலசிங்கம், கணக்குப் பரிசோதகர்: திரு சு. பரம்சோதி, திரு. வி நித்தியானந்தன், நிலைய தொடர்பு உதவியாளர்: திரு. ஆ அருணாசலம், திரு அ. சிகனகரெத்தினம்.

### பயிர்ச் செய்கைக்குழு நிர்வாகிகள்

உருத்திரபுரம், புதன்

உருத்திரபுரம் 8-ம்வாய்க்கால் பயிர்ச்செய்கைக் குழு உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் ச.கணபதிப்பிள்ளை, காரியதரிசி: சி. கந்தையா, தனாதிகாரி- நா, இரத்தினம். மற்றும் 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

### எம். பீ.க்கு வரவேற்பு

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலையில் நடைபெற இருக்கும் விபுலானந்தர் விழாவில் பங்குபற்றவிருக்கும் மட்டுநகர் முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதி திரு. செ. இராஜதுரை ஆவணி ஒன்பதாம் தேதி திருக்கோணமலைக்கு வர இருக்கின்றார். விபுலானந்த கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மேற்படி விழாவிற்கு வருகை தரும் திரு. செ. இராஜதுரை, அண்மையில் இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டதையொட்டி அவருக்கு வரவேற்பளிக்க திருக்கோணமலை தமிழ் பேசும் வாலிப முன்னணியினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

### கம்போடிய - அமெரிக்க உறவுகள்

நாம்பென், ஜூலை 27

அமெரிக்காவுடன் பேச்சுக்கள் நடத்தி மீண்டும் உறவுகளை ஏற்படுத்த கம்போடியா விருப்பம் கொண்டிருப்பதாக இளவரசர் நொரடோம் சிகானுக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க - கம்போடிய ராஜிய உறவுகள் கடந்த வருடம் மே மாதத்தில் துண்டிக்கப்பட்டது.

### அனலைதீவுக்கு கிராம மருத்துவமனை

கொழும்பு, புதன்

தமதூரில் மருத்துவமனை இல்லாததால் அனலைதீவு மக்கள் வைத்திய சிகிச்சைகளுக்காக ஊர்காவற்றுறை, மூளாய் போன்ற இடங்களுக்குச் செல்லவேண்டியிருந்தது. இதுசம்பந்தமாக அனலைதீவு வாலிபர் இயக்கத்தினர் முயற்சிசெய்ததின் விளைவாக இப்போது அங்கு 12 படுக்கைகள் கொண்ட கிராம மருத்துவமனையொன்று நிறுவப்படவிருக்கிறது.

### துறைமுகத்துக்கு வெளியில் உணவுக்கப்பல்

மாவிட்டபுரம், திங்கள்

சுமார் 9100 டன் உணவுப்பொருட்களை ஏற்றிக் கொண்டுவந்துள்ள கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்துக்கு சுமார் 2 மைல் தூரத்தில் நங்கூரமிட்டு இருக்கின்றது. இக் கப்பல், காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு வரும் என்பது பற்றி இங்குள்ள சுங்கப் பகுதியினருக்கோ, உணவு அதிகாரிகளுக்கோ மற்றும் துறைமுக அதிகாரிகளுக்கோ முன்கூட்டியே தகவல் எதுவும் கிடைத்திருக்கவில்லை. இதன்காரணமாக அக் கப்பல் துறைமுகத்துக்குள் வராமல் வெளியிலேயேநிற்கவேண்டியிருக்கின்றது.

இக் கப்பலின் பெயர் யுனிவேசல் டிரேடர் என்று கருதப்படுகின்றது.

### இந்தியாவின் பஞ்சநிலைமை

புதுடில்லி, ஜூலை 27

நாடுபூராவிலும் பருவமழை தவறியதால் ஏற்பட்ட கடும் வறட்சியில் 180 லட்சம் குழந்தைகள் உள்ளிட்டு 470 லட்சம் மக்கள் பஞ்சநிலையால் பாதிக்கப்பட்டனர்.

நாட்டின் பஞ்சநிலைமை பற்றி பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்கிடையே விநியோகிக்கப்பட்ட ஒரு குறிப்பில் இந்த விபரங்கள் காணப்படுகின்றன.

நாட்டிலுள்ள மொத்தம் 330 ஜில்லாக்களில் 125 ஜில்லாக்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

### யாத்திரிகர்களுக்கு தாகசாந்தி

கோண்டாவில், புதன்

கோண்டாவில் புகையிரத நிலையத்தில் கதிர்காமயாத்திரிகர்களுக்குத்தினமும் தேநீர் அளிக்கப்படுகின்றது. இத்தொண்டினை நிலைய அதிபர்களும் ஊழியர்களும் மேற்கொண்டுள்ளனர்.

### தொலைபேசி ஒட்டுக்கேட்டல்

கொழும்பு, ஜூலை 27.

தொலைபேசி ஒட்டுக்கேட்டல் விஷயமாக ஆராய தனிமனிதக் கொமிஷனராக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

### அவுஸ்திரேலிய தூதுக்குழு

கொழும்பு, ஜூலை 28.

விமானசேவை மந்திரி திரு. ஆர். டபிள்யு சுவட்ஸின் தலைமையில் ஓர் அவுஸ்திரேலிய பாராளுமன்றவுகுழு இன்று கொழும்பு வந்துசேருகின்றது. இவர்கள் இலங்கை அரசாங்கத்தின் விருந்தாளிகளாக மூன்று நாட்கள் இலங்கையில் தங்குவர்.

### ஆபிரிக்க நாடுகளின் எச்சரிக்கை

டார் எஸ்சலாம், ஜூலை 27

தன்ஸனியா, உகண்டா, ஸாம்பியா, கென்யா ஆகிய கிழக்காபிரிக்க சாம்ராஜ்ய நாடுகளின் தலைவர்கள் ரொடீஷியா விஷயமாக 2 சாம்ராஜ்ய நாடுகள் கூட்டிலிருந்தும் தாம் விலகப்போவதாக எச்சரிக்கை செய்துள்ளனர்.

ரொடீஷியாவில் சட்டபூர்வமான அரசாங்கத்தை நிலைநாட்ட பிரிட்டன் தவறின், ஸாம்பியா சாம்ராஜ்ய நாடுகள் கூட்டிலிருந்து பிரிந்து விடுமென்று ஸாம்பியாவின் ஜனாதிபதி கென்னத்கவுண்டா தெரிவித்தார்.

(பி. டி. ஐ)

### இஸ்ரேல்-சிரியா தகராறு

நியூயோர்க், ஜூலை 27

ஜூலை 14-ந் திகதிநடந்த ஒரு விமானத் தாக்குதலிலிருந்து எழுந்த இஸ்ரேலிய, சிரிய குற்றச்சாட்டுக்களை அச்சம்பவம் பற்றிய ஐக்கிய நாடுகள் சமாதான உத்தியோகத்தர்களின் அறிக்கைக்குப் பார்த்திராது உடனடியாக விவாதிக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானித்துள்ளது.

(பி. டி. ஐ)

### கம்யூனிஸ்டுகள் கைது

பிரேஸில், ஜூலை 27

இங்குள்ள விமான நிலையமொன்றில் குண்டுவெடித்ததன் விளைவாக மூன்று பேர் இறந்தனர். பலர் காயமுற்றனர். இது சம்பந்தமாக பிரேஸில் பொலிசார் உள்ளூர்க் கம்யூனிஸ்டுகள் பலரைக்கைது செய்துள்ளனர்.

(பி. டி. ஐ)

### வடவியட்னாமியர் கொல்லப்பட்டனர்

சைகோன், ஜூலை 27

இரு வியட்னாம்களுக்கிடையேயுள்ள எல்லைக்குத் தெற்கே இருக்கும் காட்டுப் பிரதேசத்தில் அமெரிக்கத் துருப்புக்கள் நடாத்திய பெருந் தாக்குதலின் விளைவாக 738 வடவியட்னாமியர் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்க ராணுவ பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இத்தாக்குதல் தொடர்ந்து 19 நாட்களாக நடைபெற்றது.

(பி. டி. ஐ)

### மாணவர்களின் சிரமதானம்

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களும், நெல்லியடி கரவை பல்கலை மாணவர் மன்றமும் கரவெட்டி பகுதியில் நிலவிவரும் தண்ணீர்ப் பஞ்சத்தை போக்குவதற்கு இப்பகுதியில் உள்ள பல பாழடைந்த கிணறுகளையும், குளங்களையும் ஆசிரியர் திரு. மு. செல்வத்தம்பி தலைமையில் சிரமதானம் மூலம் திருத்தினர்.

### நினைவு தினம்

உடுப்பிட்டி, புதன்

காலஞ்சென்ற திரு சி. தர்மகுலசிங்கம் (ஜெயம்) ஞாபகார்த்தவிழாவை முன்னிட்டு இம்மாதம் 28-ம் திகதி பருத்தித்துறையில் பொதுக்கூட்டமொன்று நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி நாட்டு உதவி விரைவில் கிடைக்கும்

## ஒப்புக்கொண்ட நாடுகள் நாளைக்குள் அனுப்பிவிடும்

கொழும்பு, புதன்

இலங்கைக்கு நிதி உதவி அளிக்க ஒப்புக்கொண்டுள்ள வெளிநாடுகள் சில தமது உதவித் தொகையை வெகு விரைவில் அதாவது நிதிமந்திரி தமது வரவு—செலவுத்திட்ட உரையை இம்மாதம் 29-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் நிகழ்த்துவதற்குமுன் இலங்கைக்கு அளிக்கக்கூடுமென்று அரசாங்கம் எதிர்பார்ப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

நிதிமந்திரி தயாரித்துள்ள புதிய நிதிவருடத்திற்கான உத்தேச வரவு—செலவுத் திட்டத்தில் 90 கோடியே 80 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. துண்டுவிழுந் தொகையைச் சரிக்கட்டுவதற்கு 60 கோடி ரூபாய் வெளிநாட்டு உதவியை நிதிமந்திரி எதிர்பார்க்கிறார் இந்த அறுபது கோடி ரூபாயில் ஐம்பது கோடி ரூபாய் இலங்கைவெளிநாடுகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக இலங்கைக்கு வெளிநாடுகள் சில அளிக்க ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டதாகும்.

### புதுடில்லியில் 12 பேர் கைது

புதுடில்லி, ஜூலை 27

புதுடில்லியில்பன்னிரண்டு பேர் நேற்று கைதுசெய்யப்பட்டனர். பதுக்கல், கொள்ளை லாபமடிப்பதைத் தொடர்ந்து பல வர்த்தக ஸ்தாபனங்களில் அதிகாரிகள் திடீர் பரிசோதனை நடத்தியதன் விளைவாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

## அரசாங்கத்தைக் கவிழ்க்க திட்டமிட்டிருந்தனர்?

### சிங்கப்பூரில் 6 பேர் கைது

சிங்கப்பூர், ஜூலை 27

சிங்கப்பூர் அரசாங்கத்துக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றத்துக்காக இன்று ஆறுபேர் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்.

சீனருக்கும் மலாயருக்குமிடையே சண்டையைத் தூண்டி விடவும் சிங்கப்பூர் அரசாங்கத்தைக் கவிழ்க்கவும் இவர்கள் நோக்கம் கொண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக இவர்கள் ஒரு கோஷ்டியாகச் செயல் பட்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில் இ. போ. ச. திடீர் பரிசோதகர்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த திடீர் பரிசோதகர்கள் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் திடீர் பரிசோதனைகள் நடத்திவருகின்றனர்.

பருத்தித்துறைப் பகுதியில் இவர்கள் நடத்திய திடீர் பரிசோதனையின்போது சிலர் டிக்கற் இல்லாமல் பிரயாணம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இவர்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் பஸ்களிலும் பஸ்நிலையங்களிலும் திடீர் சோதனை நடத்திவருகின்றனர்.

ஒருவார காலம்வரை இக்குழுவினர் இங்கிருப்பார்கள்.

## நெடுந்தீவு - குறிகாட்டுவான் புதிய படகுச் சேவை

### சனிக்கிழமை ஆரம்பம்

நெடுந்தீவு, புதன்

நெடுந்தீவுக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே நடைபெற்று வந்த மோட்டார் படகுச் சேவை இம்மாதம் 30-ம் திகதியிலிருந்து குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்குமிடையே நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

30-ம் திகதி குறிகாட்டுவான் துறைமுகத்தை யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா திறந்து வைப்பார். இத்துறைமுகம் திறந்து வைக்கப்பட்டதும் நெடுந்தீவுப் பிரயாணிகள் கஷ்டம் தீர்ந்துவிடும் என நம்பப்படுகிறது. இதுவரை காலமும் தினசரி ஒருசேவை மட்டுமே நெடுந்தீவுக்கு நடைபெற்றுவந்தது. ஆனால் 30-ம் திகதியிலிருந்து இரண்டு மோட்டார் வள்ளங்கள் ஒன்று காலை 9 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்தும், அதேநேரத்தில் நெடுந்தீவிலிருந்தும் புறப்படுகின்றன. மீண்டும் இவை மாலை 2-30க்கு திரும்புகின்றன.

இச்சேவை விரைவில் நான்கு தடவையாக அதிகரிக்கப்படும் என அறியப்படுகிறது.

இதுவரை 17 மைல் தூரத்தை படகால் கடந்த மக்கள் புதிய சேவையின்மூலம் 5 மைல் மட்டுமே கடலால் கடக்கவேண்டியிருக்கும்.

### யாழ். புதிய பஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸுக்குக் கிடைத்தது இதனை ஓட்டிவந்த சாரதி எஸ். இராசரத்தினத்துக்கு கழுத்தில் ஒரு மாலை விழுந்தது!

அரசாங்கஅதிபர்வேர்ணன் அபயசேகராவும், மற்றும் உத்தியோகத்தர்கள், பிரயாணிகளும் டபிள்டெக்கர் பஸ் ஒன்றில் யாழ்நகரமண்டபம்வரை பிரயாணம் செய்துவந்தனர்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவுடன், யாழ் மாநகரசபை விசேஷ கமிஷனர்கள் திருவாளர்கள் எஸ். ஸி. மாணிக்கவாசகர், என். நடேசன், இ போ ச யாழ் பிரதேச முகாமையாளர், என்ஜினியர் இ வைத்தியலிங்கம், வடபிரதேச பஸ் பிரயாணிகள் சங்க பிரமுகர்கள் இந்த திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொண்டனர்.

புதிய பஸ் நிலையத்தை அரசாங்க அதிபர் சுற்றிப் பார்வையிட்டார். யாழ். மத்திய பஸ்நிலையம் — நேர அட்டவணை என்ற பெரிய விளம்பரப் பலகை பஸ் நிலையத்தின் நுழைவாசலில் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. இந்த விளம்பரப் பலகையில் பஸ்கள் புறப்படும் இடமும் நேரமும் தெளிவாகப்போடப்பட்டுள்ளது பிரயாணிகளுக்கு மிக்க உதவியாய் இருக்குமெனநம்பப்படுகிறது, பிரயாணிகள் பஸ்சுக்காகக் காத்துநிற்பதற்கு கூடாரமடிக்கப்பட்ட ஐந்து தங்குமிடங்கள் இப்புதியபஸ்நிலையத்தில்அமைக்கப்பட்டுள்ளன.

நேரக் கணிப்பாளர் தங்கியிருப்பதற்கு கூடு போன்று செய்யப்பட்ட தனி இடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய பஸ் நிலையத்தில் ஒருசிறிய அலுவலகமும் நுழைவாசலில் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கிழக்குப் பகுதிக்கும். தூரஇடங்களுக்கும் போக்குவரத்து செய்யும் பஸ்கள் புதிய பஸ் நிலையத்திலிருந்து செல்லுமென்றும் இந்தபஸ்நிலைய வேலைகள் பூர்த்தியாகியதும் மற்ற இடங்களுக்குச்செல்லும்பஸ்களும் இதனூடாக போக்குவரத்திலீடுபடுத்தப்படும் எனவும்தெரிகிறது.

—

### இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பழையபஸ் நிலையத்தில் நேற்று மாலை அங்குநின்ற பிரயாணிகளுக்கு இடையூறு விளைத்துக்கொண்டிருந்ததாகக் கருதப்பட்ட ஒருபெண்ணை பொலிசார் கைதுசெய்தனர்.

இப்பெண் [illegible] றது.

யாழ். மாநகரசபை

## கமிஷனருக்கு எதிராக இன்னுமொரு வழக்கு

### திரு. ராஜசூரியர் தாக்கல் செய்துள்ளார்

கொழும்பு, வியாழன்

கலைக்கப்பட்டயாழ் மாநகரசபையில்அங்கத்தவராக இருந்த திரு ஜோர்ஜ் ராஜசூரியர் மாநகரசபையின் விசேஷ ஆணையாளர்களுக்கெதிராக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்

மாநகரசபைஉள்ளூராட்சி மந்திரியினால் கலைக்கப்பட்டதைத்தொடர்ந்து அதன்நிர்வாகத்தை நடத்துவதற்காக மூன்று ஆணையாளர்களைக்கொண்ட விசேஷ கமிஷன் ஒன்று கவர்னர் ஜெனரலினால் நியமிக்கப்பட்டது

மாநகரசபை கலைக்கப்படுவதற்குமுன் மேற்கொள்ளப்பட்ட செயல் திட்டங்களைத் தொடர்ந்துநிறைவேற்றாமல் விடுவதிலிருந்து இந்த ஆணையாளர்களைத் தடுக்கும்படி திரு ராஜசூரியர் தமது மனுவில் கேட்டிருக்கின்றார்.

விசேஷ ஆணையாளர்களுக்கெதிராக ஏற்கனவே இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன இவைகளில் ஒன்று முன்னாள்மேயர் திரு. துரையப்பாவினாலும், மற்றது முன்னாள் அங்கத்தவர் திரு, ரி. சுந்தையவினாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

திரு ராஜசூரியர் தமது மனுவில், சபையினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட மராமத்து எஞ்சினியர் விசேஷ ஆணையாளர்களால் மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டிருப்பதாகவும், தற்போது மராமத்துசுப்பிரிண்டனாகஇருக்கும் திரு செல்வதுரையை முதல் பிரிவு மராமத்து சுப்பிரிண்டனாக நியமிக்கத் தவறிவிட்டதாகவும், மின்சார எஞ்சினியருக்கான ஒரு பதவியை உருவாக்குவதற்கு சபை செய்த தீர்மானத்தைஅமுல் நடத்தத் தவறிவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்புத்துறை இறங்குதுறை பகுதிக்கு தண்ணீர் விநியோகத்திட்ட விஸ்தரிப்பை ஆணையாளர்கள் நிறுத்திவிட்டனர். இதன் மூலம் வரியிறுப்பாளர்களின் முக்கிய தேவையொன்றை இல்லாமற் செய்துவிட்டனர். கொழும்புத்துறை சந்தை விஸ்தரிப்பு வேலைகளை ஆணையாளர்களின் உத்தரவின் மேல் மராமத்து இலாகா நிறுத்திவிட்டது என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

கலைக்கப்படுவதற்குமுன் சபை மேற்கொண்ட நடவடிக்கைகளை செய்யாமல் விடுவதிலிருந்து விசேஷ ஆணையாளர்களைத் தடுக்கும்படி திரு ராஜசூரியர் தமது மனுவில் கேட்டுள்ளார்.

## பிளேடினால் கழுத்தில் வெட்டித் தற்கொலை!

### காசநோயாளரின் பரிதாப முடிவு

யாழ்ப்பாணம், வியா

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியின் காசநோயாளர் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. ஜோர்ஜ் தனபாலசிங்கம் என்பவர் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் தம்மைத் தாமே பிளேடினால் கழுத்தில் வெட்டி உயிரை மாய்த்துக்கொண்டார்.

இவரது மரணம் சம்பந்தமாக விசாரணைநடத்திய காங்கேசன்துறை மரண விசாரணை அதிகாரி திரு. அ. குமரகுரு, இவர் பிளேடினால் தமது கழுத்தில் வெட்டியதனால் ஏற்பட்ட காயங்களினால் மரணமானாரெனத் தீர்ப்பளித்தார்.

வார்ட்டிலுள்ள கங்காணிமார் கவனமாக நடந்துகொண்டிருந்தால் இத்தகையதொரு தற்கொலை ஆஸ்பத்திரியில் இடம்பெறுது தவிர்க்கப்பட்டிருக்கலாமெனத்தெரிவித்த மரண விசாரணை அதிகாரி இதுபற்றிச் சுகாதார டைரக்டரின் கவனத்துக்குக் கொண்டு வரவிருப்பதாகக் கூறினார்.

இறந்தவருக்கு வயது 50 என்றும் திருமணமானவர் என்றும் மரணவிசாரணையின்போது தெரியவந்தது

## 103 இறக்குமதியாளர்கள் லைசென்ஸுகள் ரத்து!

கொழும்பு, புதன்

ஒழுங்கீனங்கள், மோசடிகள் காரணமாக இவ்வருடம் 103 இறக்குமதியாளர்களின் லைசென்சுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பார்லிமெண்டில் உதவி வர்த்தக மந்திரி திரு. பீரிஸ் இன்று சமர்ப்பித்த அறிக்கையொன்றில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டது.

லைசென்சுகள் ரத்துச்செய்யப்பட்ட அல்லது தற்காலிகமாக லைசென்சுகளை நிறுத்திவைக்கப்பட்ட இறக்குமதியாளர் எவர்மீதும் வழக்குத் தொடரப்படவில்லை. லைசென்சுகள் ரத்துச் செய்யப்பட்டவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் ஸ்திரமாக இல்லாததினால் அவர்களின் லைசென்சுகள் திருப்பிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### கதிர்காமத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதியின்பங்களா, சர்க்கியூட் நீதிமன்றம் ஆகியவை தீக்கிரையாகின. அரசாங்கக் கட்டிடங்களிலிருந்த தஸ்தாவேஜுகளும் எரிந்து சாம்பராயின. இதில் சுமார் 16 ஆயிரம் பெறுமதியான பொருள்கள் சேதமடைந்ததாகக் கருதப் படுகிறது.

பீதி

அடுத்தடுத்து ஏற்பட்டுள்ள இத்தீவிபத்தினால் கதிர்காமத்தில் அச்சமும், பீதியும் நிலவுகிறது. சேதமடைந்துள்ள பெரும்பாலான கட்டிடங்கள் தற்காலிகமானவை. இவைகளில் பலவும் கிடுகுகளால் வேயப்பட்டவை.

இத்தீவிபத்துகள் சடுதியாக ஏற்பட்டவையென்று பொலிஸார் கருதுகின்றனர். விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org